# ஜாமக்காரன்

# JAMAKKARAN

VOLUME - 2 Reg NO.TNBIL/2016/70171 ISSUE - 7

JULY 2018 TAMIL & MALAYALAM

ANNUAL SUBSCRIPTION - Rs.60/= FOREIGN - Rs.600/=

*(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21*

*ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.*

✆ 0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



**கர்த்தருக்குள் அன்பானவர்களே !**

உங்கள் யாவருக்கும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள் கூறிக்கொள்கிறேன்.

**வெளிநாட்டு ஊழியம்** முடித்து இந்தியா திரும்பி ஒரு மாதத்துக்குமேல் ஆகிறது. யாருக்கும் என்னால் பதில் எழுத முடியவில்லை.

நீங்கள் எழுதிய **இ-மெயில் கடிதங்ககளுக்கு** கடந்த ஒரு மாதமாக பதிலே எழுத நேரம்இல்லை.

**ஜுலை மாதமதான்** கடிதங்கள் எழுத தொடங்குவேன். காணிக்கைகளை வங்கி மூலம் அனுப்பின அன்பர்களுக்கு இரண்டு மாதமாக நன்றியும் கூறி பதில் எழுதவில்லை. ரசீதும் அனுப்ப முடியவில்லை. பொருத்துக்கொள்ளுங்கள். **ஜுலை மாதம்** எல்லாருக்கும் பதில் எழுதிவிடுவேன் என்று நம்புகிறேன்.

ஆனால் கடிதம் எழுதியவர் **இ.மெயில் அனுப்பியவர், காணிக்கை அனுப்பியவர், கர்த்தர் கொடுத்த அற்புதங்களை** குறித்து கடிதம் எழுதியவர்களுக்காக வாரம் இரண்டுமுறை ஜெபித்து துதித்து வருகிறேன். பதில் மட்டும் தாமதமாக வரும் என்னை **புரிந்துக்கொண்டவர்கள்.** என் அலைச்சலை **அறிந்தவர்கள்** என் அருமை **வாசகர்கள்** எவரும் நான் அவர்களுக்கு பதில் எழுதாததினால் நிச்சயம் கோபப்படமாட்டார்கள் என்பதை நான் அறிவேன். அவர்கள் என் சொந்த குடும்பம் அல்லவா ஆகவே நானும் அவர்களை அறிவேன், என்னை அவர்களும் அறிவார்கள்.

கடிதம் எழுதிய **எல்லா ஆயர்களுக்கும்,பிஷப்மார்களுக்கும் அனைத்து சபை பாஸ்டர்களுக்கும்,விசுவாசிகளுக்கும் என் வாழ்த்துதலை கூறுகிறேன்.**

☐ இந்த மாத ஜாமக்காரனில் ஒரு நல்ல கிறிஸ்தவ சபையைப்பற்றிய தவறான பாகங்களைக்குறித்து எழுதியது வேதனையான விஷயமாகும். ஏன் என்றால் அந்த நல்ல

ஜா ம க் கா ர ன் JAMAKKARAN

# JULY 2018

சபையின் பத்திரிக்கையில் **பொய்யான அறிக்கை** வெளியிடப்பட்டுள்ளது. அதற்காகவே எழுதவேண்டிவந்தது.

☐ **தந்தை(சகோ.தினகரன்) எவ்வழியோ - மகனும் (பால்தினகரன்) அவ்வழி**

**திரு. மோடி** அவர்கள்தான் அடுத்த முறையும் இந்திய நாட்டை ஆளவேண்டும். தேர்தலில் முழு மெஜாரிட்டியுடன் BJP ஜெயிக்கவேண்டும். அதற்காக பால்தினகரனாகிய நான் இயேசு அருள்நாதரிடம் ஜெபிப்பதாக திரு.மோடியிடம் சகோ பால் தினகரன் கூறினார் என்று செய்தி வந்தது. இப்போது **காருண்யா கல்லூரியை** நிகர்நிலை பல்கலைகழகமாக மாற்றி வெற்றிகரமாக கோடிகளை சம்பாதித்த அந்த வியாபாரத்தை (ரினிவல்) புதுப்பித்துவிட்டார் **பால் தினகரன் திரு. மோடி** அவர்களின் BJP கட்சி ஜெயிக்கவேண்டும் என்று ஜெபித்து வாழ்த்தி வந்ததால் பால்தினகரனுக்கு பரிசாக (ரினிவல்) **புதுப்பித்தல் ஆர்டர் கிடைத்துவிட்டது.** அடுத்த 5 ஆண்டுகளுக்கு நிகர்நிலை பல்கலைகழக அந்தஸ்து நீடிக்கும். பல கோடிகள் புரளப்போகிறது. இவர்கள் ஆண்டவருக்கு **ஊழியம் செய்கிறார்களா? அல்லது வியாபாரம் செய்கிறார்களா?** கிறிஸ்தவ மக்களாகிய நீங்கள் தான் உணரவேண்டும். நீங்கள் அனுப்பிய காணிக்கைகள் இளம் பங்காளர் வழியாக அனுப்பிய பணம் தான் காருண்யா என்ற நிகர்நிலை பல்கலைகழகம் உருவானது. ஆனால் அவர்கள் உங்களுக்கு திருப்பி செய்தது என்ன? கொஞ்சம் யோசித்துப்பாருங்கள். ஆனால் நாமோ கிறிஸ்தவ சபைகளை அழிக்க நினைக்கும் கட்சி வரக்கூடாது என்றும் 2021ம் வருடத்துக்குள் இந்தியாவில் கிறிஸ்தவர்களே இருக்கமாட்டார்கள் அதற்கான ஏற்பாட்டை செய்துவிட்டோம் என்று சவால்விட்டிருக்கும் இப்படிப்பட்ட கட்சி ஜெயிக்ககூடாது என்று கிறிஸ்தவர்கள் ஜெபத்தில் அழுகிறார்கள். ஆனால் பால் தினகரன் திரு. மோடி கட்சி ஜெயிக்கவேண்டும் என்று ஜெபிக்கிறார். இவர்களை நம்புகிறவர்கள், தாங்குகிறவர்கள் இனியாவது இவர்களை குறித்து அறிந்து விழிப்போடிருங்கள்.

☐ ஜாமக்காரனுக்கு முகம் தெரியாத புதுபுது நபர்கள் ஆன்-லைன்மூலமாக பணம் அனுப்பியதை என் **வங்கி கணக்கு** புத்தகத்தில் கண்டேன். கர்த்தருக்கே மகிமை. அடையாளம் தெரியாத அந்த அன்பர்களுக்காக ஜெபிக்கிறேன். அவர்களுக்காகவும் தெய்வத்தை துதிக்கிறேன். கர்த்தர்தாமே நாம் எல்லாரையும் ஆசீர்வதித்து **நடத்துவாராக.** கர்த்தரின் கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக. தொடர்ந்து ஜெபிக்கிறேன்.

**கர்த்தரின் உன்னத பணியில்**

**✍ டாக்டர்.புஷ்பராஜ்**

# E-mail

ஜாமக்காரன் கடந்த மாதம் வரவில்லை என்று சிலர் ஒவ்வொரு மாதமும் எனக்கு எழுதியிருக்கிறார்கள். நீங்கள் எழுதும் இ-மெயில் அல்லது கடிதத்தில் உங்கள் **பழைய விலாசத்தையும்** உங்களுக்கு **கொடுக்கப்பட்ட நம்பரையும், தொலைபேசி எண்ணையும்** எழுதினால் உங்கள் விலாசத்தை லட்சக்கணக்கான விலாச பட்டியலில் தேடும் நிலை ஏற்படாது. ஆகவே இனி எழுதுபவர்கள் எத்தனை முறை எனக்கு பழக்கமானவர்களாக இருந்தாலும் உங்கள் முழுவிலாசத்தையும் ஜாமக்காரனாகிய நான் மனதில் வைத்துக் கொள்ளமுடியாது. ஆகவே உங்கள் பழைய விலாசத்தையும்,புது விலாசத்தையும் தெளிவாக குறிப்பிடுங்கள். இந்த விஷயத்தில் உங்கள்ஒத்துழைப்பை நாடுகிறேன். புது விலாசம் எழுதி அறிவித்தால் e-mailக்கு அல்லது உங்கள் கடிதத்துக்கும் உடனே பதிலும் கிடைக்கும். ஜாமகாரனும் தாமதிக்காமல் உங்கள் **புது விலாசத்தில்** அனுப்பிவைக்கப்படும். காணிக்கை விவரத்தை எழுதி அறிவிக்கிறவர்கள் உங்கள் **தொலைபேசி எண்ணையும்** மறக்காமல் குறிப்பிடுங்கள். **காணிக்கை கிடைத்த விவரத்தை உங்களுக்கு தொலைப்பேசியில்** உங்களுக்கு அறிவித்து உடனே தொலைபேசி வழியாகவே உங்களுக்காகவே ஜெபிப்போம்.



சகோதரி
லில்லிதானியேல்

# LEF சபை தலைவரின் பொய் அறிக்கை

1964ம் வருடம் முதல் நான் நல்ல அபிப்ராயம் கொண்ட சபைகளில் ஒன்றுதான் **Laymen Evangilical Fellowship(LEF)** என்ற சபை. இரட்சிப்பு -ஒப்புரவாதல் -திருப்பிகொடுத்தல்- அவிசுவாசிகளுடன் தொடர்பு கொள்ளக்கூடாது என்ற உபதேசம் தான் இந்த LEF சபையின் அஸ்திபார உபதேசம் ஆகும்.

இந்த சபையின் குறிப்பிட்ட இந்த உபதேசம்தான் சபை விசுவாசிகளின் பல குடும்பங்களை இரண்டாக உடைந்திருக்கிறது. (CPM) TPM என்ற சபையின் உபதேசமும் சொந்த வீட்டில் உள்ள அவிசுவாசியான புருஷன் சகோதரிகள் அல்லது மனைவி இவர்களோடு நெருக்கம் கொள்ளாதபடி குடும்பத்தைவிட்டு பிரிந்துபோகும் அளவு மூளை சலவை செய்து பிரித்துவிடுகிறார்கள். ஆகவேதான் LEF & TPM சபைகளை ஆவிக்குறிய தீவிரவாதிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். இதன் விவரங்கைக்குறித்து பல வருடங்களுக்கு முன்பே ஜாக்காரனில் எழுதியிருக்கிறேன் என்றாலும் முழுவிவரத்தை வரும் சில மாதங்களில் எழுதுவேன்.

இந்த LEF சபையின் **மிக நல்ல பகுதி** ஏராளம் இருக்கிறது. அது பக்கம் இருக்க இந்த LEF சபையின் மற்ற **சாட்சியில்லா** பகுதியைப்பற்றிதான் இப்போது மனவேதனையுடன் எழுதி விமர்சிக்கிறேன். ஒரு நல்ல சபையை அழிக்கவோ அல்லது உடைக்கும் நோக்கத்தோடோ இதை எழுதவில்லை. இதை என்றோ ஜாமக்காரனில் எழுத நினைத்து பல காரணங்களால் அது தள்ளிப்போனது.



சகோ.**தானியேல்**

## பொய் அறிக்கை:



**சகோ.ஜோ**

LEF சபையின் ஸ்தாபகர் சகோ.**தானியேல்** என்பவராகும். இவரின் மகன்தான் சகோ.ஜோ. டேனியல் என்பவராகும். இவர்கள் சுவிசேஷர்களாக, பிரசங்கிமார்களாகத்தான் ஊழியத்தை ஆரம்பித்தார்கள். அன்றைய காலங்களில் L.M.S, CSI, போன்ற மெயின்லைன் சபைகளும் இவர்களை அழைத்து கூட்டங்களை நடத்தினார்கள். ஒவ்வொரு கூட்டத்திலும் ஏராளமானவர்கள் மனம்திரும்பி இரட்சிக்கப்பட்டார்கள். ஞானஸ்நானம் உபதேசத்தை தங்கள் பிரசங்கங்களில் இவர்கள் கூற ஆரம்பித்த உடனே சிஎஸ்ஐ சபைகளில் ஏராளமானவர்கள் இவர்களால் ஞானஸ்நானம் பெற்றார்கள். இதன் காரணமாக ஞானஸ்நானம்

பெற்றவர்களை சிஎஸ்ஐ சபை தங்கள் சபை சட்டத்தின்படி சபை அங்கத்தினர் பட்டியலிலிருந்து இவ்ரகளை நீக்கியது. இப்படி பல்வேறு சபைகளிலிருந்து நீக்கப்பட்டவர்கள் **ஆந்திரா** முதல் **தமிழ்நாடு** வரை ஆங்காங்கே ஒன்றுகூடி (Fellowship) **சுவிசேஷ ஐக்கியம்** என்ற பெயரில் வீட்களில் சபையாக ஒன்றுகூட ஆரம்பித்தது. அதுவே நாளடைவில் ஒரு புதிய சபையாக உருவெடுத்தது. சகோ.தானியேல் அவர்களின் மறைவுக்குபிறகு **சகோ. ஜோ** அவர்கள் LEF சபைகளின் முழ பொருப்பெடுத்தார். குடும்பம் முழுவதும் ஊழியத்தில் இறங்கி செயல்பட்டனர். மெத்த படித்தவர்களெல்லாம் சபையின் தூண்களாக சபைகளை கட்டி எழுப்பினார்கள். அதில் குறிப்பிடப்பட்டவர் **டாக்டர்.ஜெயசிங்** அவர்களாகும்.

மிக கடுமையான சட்டங்கள்,கட்டுப்பாடுகள்,உபதேசங்களாக மாறி நாளடைலில் LEF சபையின் அங்கத்தினர்களின் **பிள்ளைகளின்** திருமணங்களில் பிரச்சனையாக வெடித்தன.

சகோ.**ஜோ** அவர்கள் சபை மக்களின் விக்கிரகமாக்கப்பட்டார். அவர் கூறுவதுதான் கர்த்தரின் வேத வாக்காக மாறியது. சபையின் ஒரு அங்கத்தினரின் குடும்பத்தில் பிறந்த **வாலிபன், வாலிப பெண்** திருமணம் செய்ய வேண்டுமானால் LEF சபையை தவிர வேறு எந்த சபையிலிருந்தும் பெண் எடுக்கவோ பெண் கொடுக்கவோ கூடாது. திருமண விஷயத்தில் பெண் அல்லது அந்த பையனை சகோ. **ஜோ** அவர்கள் வேண்டாம் என்று சொல்லிவிட்டால் அதற்கு யாரும் மறுப்பு கூறமுடியாது. சகோ.**ஜோ** ஜெபித்து அவர் கூறும் பதிலுக்காக சபை மக்கள் காத்திருப்பார்கள். இது ஒவ்வொரு குடும்பத்திலும் பிரச்சனைகளை உருவாக்கியது.

## ஜோ குடும்பத்துக்குள் பிரச்சனை



**சகோ. ஜோ அவர்களின் குடும்பம்**

**இரட்சிப்பு - கட்டுபாடு** சபை மக்களுக்குமட்டும்தான். தன் குடும்பத்துக்கு அந்த கட்டுபாடு சகோ.ஜோவால் கொண்டுவரமுடியவில்லை என்பது அவருக்கு மிகப்பெரிய அடியாக விழுந்தது. தான் பெற்ற பிள்ளைகளின் சாட்சியிழந்த செயல்களால் சகோ. ஜோவுக்கு பெருத்த அவமானம்

உண்டானது. பல விதத்தில் அதை சமாளித்து சபை மக்களின் கண்களை மறைக்க முயன்றார். ஆனால் எல்லாம் வெளியரங்கமானது.

# ஸ்தாபகர்களின் வாழ்கையில் சாட்சி இல்லாமல் போனாது.

முழு விஷயங்களையும் எழுதாமல் குறிப்பிட்ட ஒரு சில விஷயங்களைமட்டும் குறிப்பிடுகிறேன்.

சகோ.ஜோ அவர்களின் மரணத்துக்குபிறகு பல விஷயங்கள் பூதாகாரமாக வெளிப்பட்டன.

**ஒப்புரவு உபதேசம்** என்பதை சகோ.ஜோ அவர்களாலேயே பின்பற்ற முடியவில்லை. ஒரு சிறு விஷயத்தில் தன் கூடபிறந்த சகோதரியோடு ஏற்பட்ட அபிப்ராய வித்தியாசம் காரணமான ஏற்பட்ட மன கசப்பு அந்த சகோதரியின் மரணநேரம் வரை சகோ.ஜோ அவர்கள் அந்த சகோதரியிடம் ஒப்புரவாகவில்லை. அந்த சகோதரி மரிக்கப்போகிறார் என்று உணர்ந்தவுடன் பெயருக்கு ஒப்புரவாவதைப்போல் காட்டிக்கொண்டார்.

**சகோ லில்லி டேனியேல் எழுதியதாவது :**

☐ 2017 ஆகஸ்ட் மாதம் இவர்களின் சபை பத்திரிக்கை(ஜெயகிறிஸ்து)யில் **சகோ.லில்லி தானியேல்** அவர்கள் பொய்யான செய்தி எழுதினார்.

1) பக்கம்(8). எங்களுடைய வீட்டில் ஜோ **ஒருபோதும் பணத்தைப்பற்றி** பேசியதேயில்லை. சகோ.ஜோ **நிலங்களையோ, வீடுகளையோ** தன் சொந்த குடும்பத்தினருக்காக ஒருபோதும் வைத்துவிட்டுப்போகவில்லை. ஒருவன் பணத்தைப்பற்றி பேசாமல் இருப்பது சாத்தியமா? ஆனால் எங்கள் வீட்டில் நாங்கள் பணத்தைப்பற்றி பேசுவதேயில்லை. நாங்கள் எங்கள் பிள்ளைகளிடம் நீங்கள் எவ்வளவு சம்பாதிக்கிறீர்கள் என்று கேட்டதேயில்லை.

2) ஆனால் **அவர்கள் தேவைகள்** சந்திக்கப்படுகின்றன. தேவன் பிள்ளைகளைக்குறித்து கர்த்தர் அக்கறை எடுத்துக்கொள்கிறார். சகோ.ஜோ அவர்கள் நரம்பு தளர்ச்சியுற்று படுக்கையில் இருந்தபோது அவர் **"ஆண்டவரிடம் சொன்னதாவது. ஆண்டவரே, என்னிடமிருந்து நான் பிரசங்கிப்பதை ஏன் எடுத்துவிட்டீர்"**, அதுவே அவர் கவலையாக இருந்தது.

3) **நான் என்னும் அகந்தை பெரிதும் உள்ள** பிரசங்கிமார்களை **மேடையில் ஏற்றவே கூடாது.** தலைவர்களாக நாம் யாரை மேடையின்மேல் வைக்கிறோம் என்பதைக்குறித்தும், **ஆராதனையை ஆரம்பித்து நடத்துபவர்களைக்குறித்தும் கூட அதிக ஜாக்கிறதையுள்ளவர்களாக இருக்கவேண்டும்.** சகோ.ஜோ தன் வாழ்க்கையின் இறுதியில் **மேடையை அதிகம் சுத்திகரிக்க ஆரம்பித்தார்.** அபாத்திரமான எந்த ஒரு மனிதனையும் மேடையில் ஏற்றப்படகூடாது. சிலர் மேடையில் மட்டும் மற்றவர்களின் காட்சிக்காக **காரியங்களை நன்றாக** செய்கிறவர்களாய் இருக்கிறார்கள்.

4) சில ஊழியர்கள் சுயத்தால் பெரிதும் நிறம்பியிருக்கிறார்கள். அவர்களுக்கு பிரசங்கிக்க தருணம் தரபடாவிட்டால் தாங்கள் பெரிதும் **அவமானபட்டுவிட்டதாக உணருகிறார்கள். உன்னை நீ ஏன் தாழ்த்தக்கூடாது?.**

❖ நம்முடைய சபையில் ஒரு ஊரில் தன் கணவரோடு எப்போதும் சண்டைப்போட்டுக் கொண்டு அவனோடு வாழாத ஒரு பெண் இருந்தாள். அவள் எப்போதும் தன் கணவனை குற்றஞ்சாட்டிக்கொண்டு சத்தம் போட்டுக்கொண்டிருப்பாள். ஆனால் அங்கிருந்த பெல்லோஷிப் தலைவர் அவளை ஓய்வுநாள் பாடசாலையின் ஆசிரியையாக நியமித்திருந்தார். சகோதரி(லில்லி)யாகிய நான் கேள்விப்பட்ட மாத்திரத்தில் "உடனடியாக அவளை ஓய்வுநாள் பாடசாலை ஆசிரியர் பதவியிலிருந்து அவளை வெளியேற்றுங்கள்" என்றேன். சாட்சியில்லா அவள் ஒருநாளும் ஓய்வுநாள் பாடசாலை ஆசிரியையாக இருக்கக்கூடாது என்றேன்.

5) **தம் பிள்ளைகள் எப்படி வாழ்வது என்பதை முன்மாதிரி மூலம் இயேசு நமக்கு போதித்தார். நாம் அதை பின்பற்றவேண்டும்.** இப்படி சகோ லில்லி அவர்கள் எழுதியுள்ளார்.

# ஜாமக்காரனின் கேள்விகளும் - விமர்சனமும்:

**சகோதரி.லில்லி தானியேல்** அவர்கள் தன் அறிக்கையில் தங்களுக்குறிய சொத்து விவரத்தில் துணிந்து பொய் பேசியிருக்கிறார். தமிழ்நாட்டில் **நீலகிரி சுகவாசஸ்தலத்தில்** உள்ள **பங்காளாவும்,சொத்துக்களும்** ஆந்திரா, பெங்களூர் (கர்னாடகா) வரை நீண்டுபோகிறது. சென்னையில் உள்ள சொத்துக்களின் மதிப்பு மட்டும் பல கோடிகள் பெருமானமுள்ளது.

LEF லேமேன் இவாஞ்ஜிலிக்கல் சபைக்கு இந்தியாவில் **ஆந்திரா, தமிழ்நாடு, கர்நாடகா, வட இந்தியா, வடகிழக்கு மாநிலங்கள்,** ஆகிய இடங்களில் ஏராளமான கிளை சபைகளும் கட்டிடங்களும், கட்டிடம் சார்ந்த நிலங்களும் பள்ளிக்கூடங்களும், ஆஸ்பத்திரிகள் என்று ஏகப்பட்ட அசையா சொத்துக்கள் உண்டு. இவைகளிலிருந்து ஏராளமான வருமானங்கள் உண்டு. இது அல்லாமல் இந்தியாவை கடந்து வெளி நாடுகளில் அமெரிக்காவில் மட்டும் பல மாநிலங்களில் சபைகள் உண்டு. அதுபோல இங்கிலாந்து தேசத்திலும் பல இடங்களில் LEF சபைகள் உண்டு. ஆஸ்ட்ரேலியா, ஜெர்மனி, ஆப்பிக்கா நாடுகளில் ஏராளமான சபைகள், கட்டிடங்கள் உண்டு.

இவர்களின் சொ்த்துக்கள் விவரங்கள் குறித்து 7 வருடங்களுக்கு முன் ஒரு பெரிய பட்டியல் எனக்கு அனுப்பப்பட்டது. அவைகள்எதையும் இங்கு குறிப்பிட விரும்பவில்லை. LEF சபையின் சட்டம் என்னவென்றால் சபையில் எடுக்கும் **விசுவாசிகளின் காணிக்கை** முழுவதும் அப்படியே சென்னையில் உள்ள LEF **தலைமை இடமான** அலுவலகத்துக்கு வந்து சேரவேண்டும். இந்தியாவில் தமிழ்நாட்டில் சென்னையில் **சோழவரம்** என்ற இடத்தின் அருகே **பியூலா கார்டன்** என்ற பெயரில் மிக பிரம்மாண்டமான கட்டிடங்களும் பறந்து விரிந்த நிலப்பரப்பும் உண்டு. அங்கேதான் தலைமை அலுவலகம் இயங்குகிறது. **இந்தியா, நேபாளம், உலக நாடுகள்** அத்தனை இடங்களிலிருந்து விசுவாசிகளின் காணிக்கை பணம் முழுவதும் இந்த இடத்திற்குதான் அனுப்பப்படுகிறது. தமிழ்நாட்டில் மட்டும் அனைத்து மாவட்டங்களிலும் இவர்களுக்கு கிளை சபைகள் கட்டிடத்துடன் உண்டு. **ஆந்திரா மாநிலம் சகோ.ஜோ** குடும்பத்தினரின் சொந்த ஊரும், சொந்த மாநிலமுமானபடியால் இங்கு இவர்கள் ஊழியமும் ஊழியமும் சபைகளும் மிக அதிகம் விரிவடைந்துள்ளது.

இந்தியாவில் **கேரள மாநிலத்தில் மட்டும்** இவர்கள் சபை விரிவடையவில்லை.

உலக அனைத்து நாடுகளிலிருந்து சபை காணிக்கை எத்தனை வந்தாலும் அது எவ்வளவு என்று LEF சபையை நடத்தும் சபை லீடர்கள் (பாஸ்டர்) யாருக்கும் கணக்கு விவரம் தெரியாது.

LEF சபை ஸ்தாபர்களாக **Dr. ஜெயசிங், சகோ சாலமோன், சகோ. எட்வர்ட் ராஜரத்தினம்** போன்ற சில முக்கியஸ்தர்கள் இருந்த காலத்திலேயே சபையின் காணிக்கை **வரவு- செலவுகள் யாவும்** வெளியரங்கமாக இருக்கவேண்டும் என்று பேசினார்கள்.

அப்போது கூறப்பட்ட பதில் கர்த்தர் எனக்கு வசனத்தின் மூலமாக பேசினார். II இரா. 22:7ல் அன்று ஆலயத்தை பழுதுபார்க்க ஆட்களை நியமித்தபோது அதன் செலவினங்களுக்கு யாரிடம் பணம் ஒப்புவிக்கப்பட்டதோ அவர்களிடம் அந்த பணத்தின் வரவு-செலவு கணக்குகளை கேட்கவேண்டியதில்லை என்று ராஜா கட்டளையிட்டான். இந்த வசனம் கர்த்தர் காட்டியதால் LEF பணத்தை கையாளுகிறவர்களிடம் யாருக்கும் கணக்கு கேட்கும் அதிகாரம் இல்லை என்று அந்த காலத்திலேயே இப்படிப்பட்ட கேள்விக்கு முற்றுபுள்ளி வைக்கப்பட்டுள்ளது. அதனால் இன்று வரை LEF சபையில் மக்கள் யாரும் சபை நடத்தும் லீடர்களிடம் (பாஸ்டர்) கணக்கு கேட்க துணிந்ததில்லை.

அப்படி LEFன் தலைவர்களைப்பற்றி கேள்வி கேட்பவர்கள் அல்லது சந்தேகப்படுகிறார்கள் என்று அறிந்தால்போதும் அவர்கள் சபையில் ஓரங்கட்டப்படுவார்கள். தமிழ்நாட்டு கிளை சபைகளிலேயே சபையை நடத்தும் சபை லீடர்கள் (பாஸ்டர்) ஆராதனையை நடத்துபவர்களை அங்கத்தினர்கள் சபை பாஸ்டரிடம் சென்று பிரதர் சிலர் இப்படி சந்தேகிக்கிறார்கள், சபையில் இப்படி பேசப்படுகிறது என்று யாராவது துணிந்து கேட்டாலே அப்படிப்பட்ட நபர்களை பாஸ்டர் ஒதுக்க ஆரம்பித்துவிடுவார். சபையில் பாய் மடக்கிவைக்கும் அல்லது நாற்காலிகளை ஒழுங்குபடுத்தும் உதவிகளைகூட அவர்களை செய்யவிடமாட்டார்கள். இப்படிப்பட்ட சுபாவம் எங்கே தொடங்கியது? LEF **தலைமை சபை** நிர்வாகத்திலதான் தொடங்கப்பட்டது. அது LEFன் அனைத்து கிளை சபைகளிலும் இப்போதும் காணப்படுகிறது.

2 இரா. 22:7ல் பணத்தை கையாள்பவர்கள் தங்களிடம் கொடுக்கப்பட்ட பண விஷயத்தில் உண்மையாக (அதாவது வெளிப்படையாக) நடப்பிக்கிறபடியால் அப்படிபட்டவர்களிடத்தில் கணக்கு கேட்கவேண்டியதில்லை என்று அறிவிக்கப்பட்டது.

ஆனால் LEFலும் பெந்தேகோஸ்தே சபைகளிலும் காணிக்கை விஷயத்தில் உண்மையில்லையே!, வெளிப்படைதன்மையும்மில்லையே!. அதே நிலைபாடுதான் எல்லா LEF சபைகளிடமும் காணப்படுகிறது. ஆந்திர LEF சபையை நடத்துனர் என்னிடம் பகிர்ந்துகொண்டபோது அவர் கூறினார். எங்கள் LEFல் குறிப்பிட்ட இந்த தவறைக்குறித்து எங்களைப்போல் உள்ள மற்ற லீடர்கள் ஒன்று சேர்ந்து கூட்டம் நடைபெறும் நாட்களில் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டதுண்டு என்றார். அப்போது நான் கேட்டேன் தலைமை தவறு செய்கிறது. நீங்கள் LEFகிளை சபையை நடத்துபவர்தானே!. நீங்கள் என்றைக்காவது உங்கள் சபையில் காணிக்கை விவரம் அறிவித்ததுண்டா? என்றேன். சிரித்துக்கொண்டே இல்லை என்றார். காரணம் எங்கள் கிளை சபையில் யாரும் அப்படி ஒரு கேள்வி என்னிடம் கேட்தில்லை என்றார்.

LEF சபையில் **ஒன்மேன் ஷோ** தான் நடக்கிறது. LEFக்கு ஒரு Board உண்டு. அதில் யார்யார் அங்கத்தினர் என்பது ஒரு சில பழைய காலத்து நபர்களுக்குதான் தெரியும். அவர்கள் எங்கெங்கு இருக்கிறார்கள் எப்போது ஒன்று கூடுவார்கள் என்ன பேசிக்கொள்வார்கள் என்பது நதிமூலம் அறியும் இரகசியமாகதான் இப்போதும் இருக்கிறது. ஆனால் Board கமிட்டியில் கூடுபவர்கள் என்ன பேசினாலும் **ஜோ** என்ன முடிவெடுக்கிறாரோ அதுதான் Boardன் முடிவு **ஜோ** எடுக்கும் முடிவுகூட சகோ.**லில்லி** என்ன சொல்கிறாரோ அதன்படி தான் **ஜோவும்**

செயல்படுவார். ஆக சுருக்கமாக சொன்னால் LEFல் இரகசிய அல்லிதர்பார்தான் செயல்படுகிறது. ஜோ இருக்கும்போதே அப்படி என்றால் ஜோவின் மரணத்துக்குபின் சகோ.லில்லி அவர்கள் சொல்லாமல் எதுவும் நடக்காது என்ற நிலைக்கு இப்போது LEF தள்ளப்பட்டுள்ளது.

சகோ. ஜோ அவர்கள் தனக்கு பிறகு LEF சபையை வழிநடத்த யாரையும் அறிவிக்கவில்லை ஸ்தாபகர்களாகவும் தூணாகவும் உள்ள எத்தனையோ **தலைவர்கள்** உண்டு. இவர்களில் குறிப்பாக Dr. ஜெயசிங் அவர்களைக்கூட இவர் LEF சபையின் எந்த பொருப்பிலும் முன் நிறுத்தினதில்லை. Dr. ஜெயசிங் அவர்களுக்குகூட சகோ. **ஜோ** ஒரு **விக்கிரமாகிவிட்டார்** என்பது வேதனையளிக்கிறது.

சபை தலைமையில் இப்படிப்பட்ட நிலை காரணமாக LEF சபையை நடத்தும் (பாஸ்டர் பொருப்பிலுள்ள) சபை லீடர்களில் சிலர் வாழ்க்கையில் தன் சொந்த குடும்ப வாழ்க்கையின் சாட்சியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. LEF சபையின் பாஸ்டர்கள் சிலர் பெரிய பதவியிலிருந்து அல்லது அரசாங்க பணியிலிருந்து வெளியேறி முழுநேர ஊழியத்துக்கு ஒப்புகொடுத்தவர்கள் உண்டு. இவர்கள் தங்கள் பண சேமிப்பிலிருந்து அல்லது தனது மனைவி பெரிய கம்பெனியில் வேலைசெய்து கிடைக்கும் சம்பாத்தியம் கொண்டு தன் குடும்பத்தை நடத்தி தன் பிள்ளைகளையும் உயர்படிப்புக்கு ஏற்பாடு செய்கிறார்கள். ஆனால் எந்த வருமானமும் இல்லாதவர்கள் முழு நேர சபை பாஸ்டராக ஊழியம் செய்பவர்களின் நிலை மிகவும் பிரச்சனைதான். இவர்கள் காணிக்கையிலிருந்து தங்கள் குடும்பம் தேவைக்குகூட ஒரு பைசா கூட எடுக்காமல் காணிக்கை பணத்தில் மிக உண்மையாக இருக்கிறார்கள். சபை மக்களே இவர்கள் தேவைகளை அறிந்து அவரவரகள் தனிப்பட்டமுறையில் இவர்களுடைய குடும்ப தேவைகளை சந்திக்கிறார்கள். பாஸ்டர்களும் சபை மக்கள் பார்வையில் மிகவும் சாட்சியுள்ளவர்களாக இருப்பதால் இவர்கள் யாரிடமும் பணத்துக்காக கை ஏந்தாமலே இருப்பதால் சபை மக்கள் குறிப்பறிந்து இவர்களுக்கு உதவிகளை செய்கிறார்கள்.

இப்படி சபையை நடத்தும் முழுநேர ஊழியர்களுக்கு LEF தலைமை மாதா மாதம் ஏதாவது உதவிதொகை கொடுக்கவேண்டும். பிள்ளைகளின் படிப்புக்கு LEF பொருப்பெடுக்கவேண்டும்.

LEFல் ஜோவும் மற்ற கிளை சபைகளை நடத்தும் யாரும் வேதாகம கல்லூரி படிப்பு படிக்காதவர்கள் ஆகும். கேட்டால் வேத்தில் சீஷர்கள் யாரும் இந்த வேதாகம கல்லூரிக்கும் சென்று படித்தவர்கள் அல்ல என்பார்கள்.

ஆரம்ப காலத்திலிருந்து LEFக்காக கணவனும், மனைவியுமாக அற்புதமாகவும், கடினமாகவும் உழைத்து ஊழியம் செய்த சகோ.Whiteson Paul அவர் மனைவி Sis.Kamala இவர்கள் மட்டும்தான் LEF சபையில் வேதாகம கல்லூரி படிப்பு படித்தவர். சகோ W.Paul அவர்களின் பிரசங்கத்துக்கும் **சகோ.ஜோ** அவர்களின் பிரசங்கத்துக்கும் மிகப்பெரிய வித்தியாசம் உண்டு. LEF சபை மக்கள்பால் அவர்களின் பிரசங்கத்தையும் சகோ.கமலா அவர்களின் ஊழியத்தையும் மிகவும் புகழுவார்கள். சகோ. கமலா அவர்கள் ஊழியம் மூலமாக தொடப்பட்ட சகோதரிகள் ஏராளம். அத்தனைபேரும் LEFயில் அங்கத்தினரானார்கள் அப்படியே **சகோ. பால்** அவர்களின் வீடு சந்திப்பு மற்ற ஊழியம் மூலமாக சபையில் அங்கத்தினர் ஆனாவர்களின் எண்ணிக்கை மிக அதிகம். இப்படி பலரால் இவர்கள் புகழப்பாட ஆரம்பித்த உடன் இவர்கள் இரண்டு பேரையும் ஆந்திராவில் ஒரு சிறு கிராமத்துக்கு அனுப்பி இவர்களிடம் தந்திரமாக பேசி புதிய ஊழியம் தொடங்க சொல்லி அனுப்பிவிட்டனர். அப்படியும் இ வர்கள் இருவரும் முறுமுறுப்பு இல்லாமல் தனக்கு கொடுக்கப்பட்ட ஊழியத்தை உத்தமத்தோடு நிறைவேற்றினர்.

இவர்களுக்கு கொடுக்கபட்ட சம்பளம் எவ்வளவு தெரியுமா? வெரும் 500/- ரூபாய் மட்டுமே. கடைசியாக 800 வரை ரூபாய் வாங்கியதாக கேள்விப்பட்டேன்.

**சகோ. லில்லி** அவர்கள் எழுதிய அறிக்கையில் **நான் என்னும் அகந்தை உள்ளவர்களை** மேடையில் பிரசங்கிக்க அனுமதிக்ககூடாது என்று மறைமுகமாக கூறியது **சகோ.பால்** அவர்களைப்பற்றிதான் கூறினாரா? அவர் தலைமை சபையிலிருந்து **ஆத்துமாக்கள் இல்லாத ஆந்திரா கிராம சபைக்கு அனுப்பி சகோ.பால் அவர்களை அவமானப்படுத்தியதாக சபை** மக்கள் சகோ பால் அவர்களைப்பற்றி கூறியதை மனதில் வைத்து சகோதரி.லில்லி இப்படி எழுதினாரோ. **சிலர் பிரசங்கிக்க தருணம் தரப்படாவிட்டால் பெரிதும் அவமானபட்டுவிட்டதாக நினைக்க கூடாது** என்று எழுதியதும் சகோ. பால் அவர்களை மனதில் வைத்து எழுதப்பட்டதாகும்.

ஆனால் LEF தலைமை சபையில் **பெண் விஷயத்தில் பிடிப்பட்ட ஒருவரை** LEF அலுவலகத்தில் பலகாலம் நீக்காமல் வைத்திருந்தார்கள். பலர் அதைப்பற்றி வெளிப்படையாக பேசுவதை அறிந்து அந்த நபரை அலுவலகத்தில் வரவேண்டாம் என்று அறிவித்துவிட்டார்கள். ஆனால் இப்போதும் அந்த நபரின் ஆலோசனைபடித்தான் அலுவலக வேலைகள் நடத்தப்படுகிறது. அவர் விலக்கி வைக்கப்பட்டவரானாலும் அவரை பகைக்காமல் அவரோடு தொடர்பு வைத்துள்ளார்கள். காரணம் LEF அலுவலகத்தின் பல இரகசியங்களைக்குறித்து அறிந்த ஒரே நபர் அவர்தான்.

## சகோ. ஜோ அவர்களின் குடும்ப செலவு:

சகோ.**ஜோ** அவர்களின் பிள்ளைகளுக்கு செய்யப்பட்ட செலவு. வெளிநாடுகளில் சென்று அவர்களை படிக்க வைத்த செலவுகள் பல லட்சங்கள், கோடிகளாகும். சகோ. ஜோவின் செலவுகள், சகோ. லில்லி அவர்களின் செலவு, **பிள்ளைகளின் ஆடம்பர செலவு** அந்த காலத்தில் பெரிய வெள்ளைக்கார்கள்மட்டும் விளையாடும் விளையாட்டு **பில்லியர்ட்ஸ்** என்பதாகும். அந்த விளையாட்டு டேபிள் பல லட்சம் ரூபாய் விலை உள்ளது.

நான் இரட்சிக்கப்பட்ட புதியதில் **நீலகிரி மலையில்** உள்ள அவர் பங்களாவில் சகோ.ஜோ வீட்டில் அந்த விலை உயர்ந்த விளையாட்டு டேபிளை சொந்தமாக வாங்கி வைத்து **ஜோ** அவர்கள் எஸ்டேட் முதலாளிகளுடன் சேர்ந்து விளையாடுவதாக கூறிக்கொண்டதை நான் கேள்விப்பட்டேன். அந்த செய்தி நிச்சயம் பொய்யாக இருக்காது.

சகோ.ஜோ வீட்டுக்கு **சபை மக்களோ சபை** (பாஸ்டர்) லீடர்களோ யாரும் போகமுடியாது. டாக்டர்.ஜெயசிங் அவர்களைகூட வீட்டின் உள்ளே அழைத்ததில்லை. சகோ.ஜோவின் பெண் பிள்ளைகளை வெளிநாட்டு நாகரீகம் பற்றிக்கொண்டதால் அவர்கள் உடைகளில் ஆபாசம் உண்டு. அவர்கள் வீட்டில் உடுத்தும் உடையை சபை மேய்ப்பர்கள் LEF தலைவர்கள் யாரும் பார்த்து விடக்கூடாது என்று தான் ஜோ வீட்டுக்கு விருந்தினர் யாரையும் அவர் அழைப்பதில்லை. ஜோவின் பிள்ளைகளின் உடுப்பை குறித்து ஜோ வீட்டு தோட்டக்காரரை காணவந்த ஒருவர் அந்த பெண் பிள்ளைகளின் உடையை கண்டு அதை மற்றவர்களிடம் அவர் கூற விவரம் வெளிவந்தது. அதன்பின் பிள்ளைகளின் **விவாகரத்து மூலம் சாட்சி நஷ்டப்பட்டது. விவாகரத்து ஒரு முறை இரு முறை அல்ல.** நிறைய பாட்டு தாலந்து உள்ள இரண்டுமுறை விவாகரத்து செய்த ஜோவின் மகளை இப்போது LEF தலைமை சபையில் மேடையில் பாட அனுமதிக்கப்படுவதில்லை.

ஆனால் **அவளுக்கு பதவி உயர்வு** கொடுக்கப்பட்டு இன்று ஒரு **பெண் பாஸ்டராக** வேறு ஒரு சபையில் இயங்குகிறார்.

சகோ. **லில்லி** எழுதும்போது **நம் பிள்ளைகள் எப்படி வாழ்வது** என்பதை முன்மாதிரி மூலம் இயேசு நமக்கு போதித்தார். **நாம் அதைத்தான் பின்பற்றவேண்டும்** என்று எழுதினார்.

ஆனால் **ஜோ குடும்பம் அதை பின்பற்றவில்லையே!** அதனால்தான் இந்த கட்டுரையை நான் எழுதும்போது தலைப்பில் LEF தலைவரின் பொய் அறிக்கை என்று எழுதினேன். அதை **மாய்மால** அறிக்கை என்றும் எழுதியிருக்கலாம்.

LEF சபை மக்களின் பிள்ளைகள் வேறு சபையிலிருந்து இரட்சிக்கப்பட்ட பெண்ணையோ, பையனையோ திருமணம் செய்ய விரும்பினால் ஜோ அதை அனுமதிப்பதில்லை அவர் **இரட்சிக்கப்பட்டவரானாலும்** அவர் வேறு சபையை சார்ந்தவர் ஆனபடியால் அவர் மூலம் சபை பரிசுத்த குலைச்சலர்கும் என்பார்.

ஆனால் **தன் மகள் காதல் வலையில் விழுந்து** உடனே விவாகரத்து செய்து மறுமணம் செய்து அந்த **இரண்டாவது கணவனையும் விவகரத்து** செய்து இன்னும் ஊழியம் செய்கிறார் என்றால் LEF சபை முழுவதும் சாட்சி இழந்ததாகத்தர்னே அர்த்தம். அதன் பிரதிபலிப்பு தமிழ் நாட்டிலும் வெளிநாடுகளிலும் இப்போது காணப்பட தொடங்கிவிட்டது. தமிழ்நாட்டில் LEF சபையின் தலைமை சபையிலிருந்தும் **ஆந்திரா, தமிழ்நாடு** ஆகிய இடங்களில் உள்ள LEFசபைகளிலும் 17 குடும்பங்களில் காதல் திருமணம் நடந்தேறியுள்ளது. அதில் ஒரு LEF பெண் **இந்து பையனை** விவாகம் செய்துகொண்டார்.

சபை தலைமையில் ஏற்பட்ட **சாட்சி குலைச்சல்** இப்போது கிளை சபைகளையும் பாதிக்க தொடங்கிவிட்டது.

## LEFன் தவறான கொள்ளை

**ஒருவன் இரட்சிக்கபட்டால் வசனத்தின் மூலம் கர்த்தர் பேசவேண்டும்.** அப்படி பேசவில்லை யானால் ஒரு வருடமானாலும் அவர்களை சபை திருவிருந்தில் பங்கு கொள்ளவிடமாட்டார்கள்.

வேறு சபையில் இரட்சிக்கப்பட்ட ஒரு சகோதரி LEF சபைக்கு இரண்டு வருடமாக போய் வருகிறார். தான்பெற்ற இரட்சிப்பை **சபை லீடர்தான்** முடிவு செய்கிறார் எனறு அவர்களின் தவறான உபதேசத்தை குறித்து என்னிடம் பகிர்ந்துக்கொண்டார். ஒரு கூட்டத்தில் யாரோ ஒருவர் செய்த பிரசங்கத்தால் குத்தப்பட்டு தன் பாவத்துக்கு மனஸ்தாபப்பட்டு ஜெபித்து அறிக்கையிட்டு இரட்சிக்கப்பட்டேன். என்கிறாய். ஆனால் நீ இரட்சிக்கபட்டதை கர்த்தர் **உன்னோடு வசனத்தின் மூலமாக பேசி** உறுதிபடுத்தினாரா? என்று எங்கள் பாஸ்டர் கேட்டார். நான் இல்லை என்றேன். அப்படியானால் தொடர்ந்து ஜெபம் செய்து **வசன அடையாளத்தை** நீ கர்த்தரிடம் கேட்டு உறுதி செய்து சொல் என்று என்னை தள்ளி வைத்துவிட்டார். ஞாயிறு பள்ளி சிறுவர்களை வழிநடத்தக்கூட என்னை பயன்படுத்து வதில்லை என்று அழுதார்.

நான் கூறினேன்: நீங்கள் குறிப்பிட்ட அந்த கன்வென்ஷனில் **வசனத்தை கேட்டு தானே** மனம்திரும்பி பாவத்தை அறிக்கை செய்தாய்? ஆம்!. என்றாள். பின் ஏன் உன் இரட்சிப்பைப்பபற்றி சந்தேகப்படுகிறாய் என்றேன். **சந்தேகம் எனக்கில்லை** LEF பாஸ்டருக்கு என்றாள். நீ இதை குறித்து கவலைப்படாதே **இரட்சிப்பு கர்த்தருடையது.** மனம்திரும்பின உன்னை LEF பாஸ்டர் ஏற்றுக்கொண்டால் என்ன? ஏற்றுக்கொள்ளாவிட்டால் என்ன? கர்த்தர் உன்னை தன் இரத்தத்தால் கழுவி உன் பாவத்தை மன்னித்துவிட்டார். இயேசு உன்னை ஏற்றுக்கொண்டார். இனி அதை உன் சாட்சியில் அவர் காட்டு. ஆனால் அந்த LEF சபையைவிட்டு விலகாதே. பாஸ்டரின்

அனுகுமுறை சரியில்லை என்றாலும் சபையில் உனக்கு எந்த ஊழியமும் கொடுக்காவிட்டாலும். சபை விசுவாசிகள் பெரும்பாலும் உண்மையான, வைராக்கியமான விசுவாசிகளாக இருப்பார்கள். உனக்காக உண்மையாக ஜெபிக்கும் விசுவாசிகள் LEF சபையில் மட்டுமே உண்டு. ஆகவே, **அந்த சபையை விட்டு விலகாதே** என்றேன். அதற்கு அவள் நீங்கள் கூறுவது உண்மைதான் சபையில் உள்ள மற்ற சகோதரிகள் யாவரும் என்னிடம் மிகவும் நன்றாக பழகி நல்ல ஆலோசனை கொடுக்கிறார்கள். அது என்னை பரிசுத்தத்தில் அருமையாக வழிநடத்துகிறது. கடந்த 9 மாதத்தில் நான் 17 சகோதரிகளை இரட்சிப்புக்கு நேராக வழிநடத்தி இன்று என்னோடு LEF சபைக்கு அவர்களை அழைத்துப்போகிறேன். நீங்கள் கூறிய ஆலோசனைப்படி LEF பாஸ்டர் எனக்கு திருவிருந்து தராவிட்டாலும் இன்று நான் **மரித்தால் கர்த்தரிடம் போவேன்** என்ற உறுதி எனக்கு இருக்கிறது. அதுபோதும் என்றாள்!.

## நவீன கால சபை பிள்ளைகள்:

இந்த காலத்து வாலிபர்களை, வாலிப பெண்களை LEF சட்ட திட்டங்கள் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால் பெற்றோர்கள் LEF சட்டத்துக்கு இப்போதும் உண்மையாக இருக்கிறார்கள். பிள்ளைகளும் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்கள். திருமண விஷயத்திலும் இரட்சிக்கப் பட்டவர்களைத்தான் அவர்களும் விரும்புவார்கள். ஆனால் LEF சபையிலிருந்து எங்களுக்கு பெண்ணோ - பையனோ வேண்டாம் என்று கண்டிப்பாக கூறிவிட்டார்கள் என்றால் LEF சபை கட்டுப்பாடு அந்த வாலிப பிள்ளைகளை எந்த அளவு பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது என்பதை கவனிக்க வேண்டும்.

இப்படிப்பட்ட திருமண விஷயத்திலும் **காணிக்கையை வெளிப்படையாக** அறிவிக்கும் விஷயத்திலும் LEF இறங்கிவரதான் ஆகவேண்டும். **பழைய உபதேசம் இனி தாங்காது.** சபை **மக்களும், சபை வாலிப பிள்ளைகள் WHY? ஜெனரேஷனை சேர்ந்தவர்கள்** அவர்கள் கேள்விக்கு LEFலீடர்களே பதில் கூற முடியாமல் தவித்திருக்கிறார்கள்.

LEF சபையில் இத்தனை பிரச்சனைகள் இருந்தாலும் **சபையில் உள்ள விசுவாசிகள் உண்மையான சாட்சியுள்ளவர்களாகும்.** அதுமட்டுமல்ல ஒருவருக்காக ஜெபிப்பேன் என்று அவர்கள் வாக்கு கொடுத்தால் **நூற்றுக்கு நூறு அவர்கள் உண்மையோடும் பாரத்தோடும்** அந்த ஆத்துமா மனம்திரும்பும் வரை ஜெபிப்பார்கள். இதை நான் LEFன் பல சபைகளில் உள்ளவர்களோடு பழகி அறிந்த விஷயமாகும்.

இப்படிப்பட்ட பல நல்ல விஷயங்கள் LEF சபையில் இருந்தாலும் வசனத்தில் அவர்களில் வளர்ச்சியில்லை. பல வருடமாக LEF சபையில் இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள் ஆனால் அவர்கள் இப்போது ஜெபித்தாலும் **இயேசுவே என்னை இரட்சியும் என் பாவங்களை மன்னியும்** என்று தான் ஜெபிக்கிறார்கள். தான் இரட்சிக்கப்பட்டதற்காக ஸ்தோத்திரம் என்ற வார்த்தை இவர்கள் ஜெபத்தில் ஜெபத்தில் வருவதில்லை. காரணம் அவர்கள் சபையில் ஒவ்வொரு ஆராதனையிலும் இரட்சிப்பைப்பற்றி மட்டுமே பிரசங்கம் செய்வார்கள். அல்லாமல் அதை தாண்டி ஆவிக்குரிய வளர்ச்சிக்கான போதனை பிரசங்கம் அந்த சபையில் இல்லை. காரணம் சபை பாஸ்டர்கள் அடிப்படை வேதாகம படிப்பு அனுபவம்இல்லாதவர்களாகும். ஐலை. எந்த **வேதாகம கல்லூரியிலும்** சென்று படித்தவர்கள் இல்லை. ஆகவே இரட்சிப்புக்குமேல் உள்ள மேலான அனுபவங்களைக்குறித்து சபைகளில் போதிப்பதில்லை.

**LEF என்ற அந்த நல்ல சபைக்காக வாசகர்கள் ஜெபிப்போம்.**



சகோ.**ஜான் தானியேல்**

இப்போது **சகோ.ஜோ** அவர்களின் மகன் சகோ.**ஜான் தானியேல்** அவர்கள்தான் இப்போது LEF சபையின் தலைமை பாஸ்டர் பொருப்பில் இருக்கிறார். இவர் நல்ல சாட்சியுள்ள சகோதரன் வேதாகம கல்லூரி படிப்பு படித்தவர். **வேத ஞானம் உள்ளவர்.** ஆனால் அவரால் **சுதந்திரமாக** எதையும் செய்ய முடிவதில்லை. கைகள் கட்டப்பட்டுள்ளதுபோல காணப்படுகிறார்.

அன்பான வாசகர்கர்களே, இன்றுள்ள **நல்ல ஆவிக்குரிய சபைகளில் LEF சபையும் ஒன்று என்றால்** அது மிகையாகாது. ஒரு புது ஆத்துமாவை கர்த்தருக்குள் வழிநடத்த வேண்டுமானால் LEF சபைக்கு அனுப்புங்கள். அவர்களை மிக அருமையாக அவர்களை இரட்சிப்பின் அனுபவத்தில் உருவாக்குவார்கள்.

புது ஆத்துமாக்களை **பெந்தேகோஸ்தே சபைகளுக்கோ, CSI,லூத்தரன் சபைகளுக்கோ** அனுப்பிவிடாதீர்கள். அவர்களுக்குள்ள **விசுவாசமும் இல்லாமல் போய்விடும்.** ஆகவே LEF போன்ற நல்ல சபைகளுக்கு புதிய ஆத்துமாக்களை அனுப்புங்கள். ஆனால் இப்போது புதிய ஆத்துமாக்கள்மேல் கரிசனையுள்ள ஆயர்கள் மெயின் சபைகளிலும் உண்டு. அதற்காக தெய்வத்தை துதிக்கிறென்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## பெயர் திருத்தம்:

மூக்குப்பீறி St.Mark Church தலைமை ஆயர். **Rev.N.JEREMIAH,MA.,BD,MTh.**, அவர்கள் சபை ஆண்டுவிழா கூட்டங்களை சிறப்பாக நடத்த மிகவும் உதவியாக இருந்தார். ஆயர் அவர்களின் பெயர் 2018 ஜுன் மாத ஜாமக்காரனில் தறவாக பத்திரிக்கையில் எழுதப்பட்டுள்ளது.

## YOU-TUBEல் என் பிரசங்கம்

யாரோ கர்த்தருடைய பிள்ளைகள் பல நாடுகளில் நான் செய்த பிரசங்கங்களை இரண்டு வித்திாசமான பெயர்களிலுள்ள YOU TUBEல் வெளியிடுகிறதாக அறிந்தேன். அந்த ஏற்பாடுகளை செய்த அன்பர்களுக்கு என் தனிப்பட்ட நன்றியை அறிவித்துக்கொள்கிறேன்.

அந்த YOU TUBEல் என் பிரசங்கம் கேட்டு ஏராளமானவர்கள் மனந்திரும்புதலின் அனுபவத்தை பெற்றதாக அறிவித்தபோது தேவனைத் துதிக்கிறேன். ஓய்வுபெற்ற தலைமையாசிரியர் ஒருவர் உங்கள் பிரசங்கம் YOU TUBEல் பார்த்தபோது நீங்கள் ஒரு வேத பாடம் வகுப்பு நடத்துவதைப்போல உணர்ந்தேன். பல புதிய விஷயங்களை உங்கள் செய்தி மூலமாக அறிந்துக்கொண்டனே் என்று அவர் எழுதியபோது மிகவும் சந்தோஷம் அடைந்தேன். என் பிரசங்கங்கள் **அமெரிக்காவில்,சிங்கப்பூரில்,அரேபிய நாடுகளில்** பேசியதை வெளியிட்டுள்ளார்கள். து அதோடு இன்னும் வேறு சிலநாடுகளில் பேசியதையும் Back to the Bible சத்தியவசனத்தில் பேசியதையும் வெளியிட்டுள்ளார்கள். ஆக அத்தனையும் U-டியூப்பில் வெளியிடுவதாக அறிந்தேன். ஜாமக்காரன் வாசகர்களாகிய நீங்களும் அதை கேட்டு **கண்டு** பயன்பெறலாம். அதை டவுன்லோட் செய்து மற்றவர்களுக்கும் நீங்கள் விநியோகிக்கலாம். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

# கேள்வி - பதில்

# ஜாமக்காரனின் பதில்கள்

## சமாதானம் திரும்புமா:

**கேள்வி: திருநெல்வேலி TDTA சபைகளின் திருமண்டல கன்வென்ஷனில் உங்கள் பிரசங்கத்துக்கு பின் திருமண்டலத்தில் இழந்தசமாதானம் திரும்பவரும் என்று நினைக்கிறீர்களா?**

***பதில்:*** நான் அப்படி நினைக்கவில்லை. அப்படிப்பட்ட எண்ணத்தோடும் பிரசங்கிக்கவில்லை. திருமண்டலத்தில் ஆவிக்குரிய மாற்றம் உண்டாக வேண்டுமானால் திருமண்டல நிர்வாகிகளைப்பற்றியும் அவர்களின் குறைகளை கூறியோ, குற்றம் சொல்லியோ பிரயோஜனமில்லை. சகரியா 4:6ன் படி பெலத்தாலும் அல்ல, பராக்கிரமத்தாலும் அல்ல என் ஆவியினாலேயே ஆகும் என்ற வசனத்தின்படி ஆண்டவர் மனதுவைத்து திருமண்டலத்தை பரிசுத்தம் செய்ய எழுந்தருள வேண்டும். அவர் கிரியை செய்ய வேண்டுமானால் பெரிய பெரிய ஊழியர்களை, வரம் பெற்ற ஊழியர்களை அல்லது டாக்டர்.புஷ்பராஜ் அவர்களை அழைத்து எத்தனை கூட்டங்கள் நடத்தினாலும் ஒரு மாற்றமும் திருமண்டலத்தில் உண்டாகாது. எசே 22:30ன்படி அழிப்பதும் -அழிக்காமல் இருப்பதும் நம் கர்த்தரின் கையில் இருக்கிறது. அவர் கை அசைய வேண்டுமானல் திருமண்டலத்தில் உள்ள ஒவ்வொரு சபையிலும் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் ஒன்று கூட வேண்டும். அவர்கள் யாரும் திருமண்டலத்தில் இப்போதுள்ள நிர்வாகிகளின் குரூப்புகளை சேர்ந்தவர்களாகவோ, திருமண்டலத்தை ஆள்பவர்களின் எதிரிகளின் குரூப்பை சார்ந்தவர்களாகவோ இருக்கக்கூடாது. குறிப்பாக திருமண்டல அரசியலில் தலையிடாதவர்களாக இருப்பது நல்லது. மேலே குறிப்பிட்ட இரட்சிப்பின் தகுதியோடுள்ளவர்கள் ஒன்று சேர்ந்து **உபவாசித்து** ஜெபிக்க வேண்டும். அதுவும் எந்த ஆலயத்துக்குள்ளும் அந்த ஜெபம் நடத்தக்கூடாது. வேண்டாத எதிர்ப்புகளும், தடைகளும் உண்டாகாதபடியிருக்க **வீடுகளில் கூடி,** அல்லது சந்தடியற்ற மைதானங்களின் ஓரத்தில் அல்லது **மரத்தடியில்** ஒன்று கூடி கண்ணீரோடு ஜெபிக்கவேண்டும். அடிக்கடி இப்படி ஒன்று கூடி ஜெபிக்கவேண்டும். ஒவ்வொரு முறையும் ஜெபிக்கும் இடங்களை மாற்றி கூடி ஜெபிக்கவேண்டும்.

ஜெபத்தில் **யாருடைய குற்றத்தையும்** சுட்டிக்காட்டாமல் **திருமண்டலம் உயர்மீட்சி** பெற வேண்டும். **ஆயர்கள்** மனந்திரும்பவேண்டும். **சபை மக்கள்** மனந்திரும்ப வேண்டும் என்று பொதுவாக ஜெபிக்க வேண்டும்.

!



**காணிக்கை எண்ணி வைக்கப்பட்டுள்ளது. சங். 56:8**

**பழைய** நிர்வாகத்தால் பாதிக்கப்பட்டவர்கள்

**புதிய** நிர்வாகத்தால் பாதிக்கப்பட்டவர்கள்

இப்படி பல விதத்தில் **பாதிக்கப்பட்டவர்களின் கண்ணீர்கள்** அவர்களின் விவரங்கள் யாவும் சாதாரண மனிதனாகிய எனக்கே ! ஜாமக்காரனான என் ஜெப அலுவலகத்துக்கே வந்து சேர்ந்ததேயானால்) **கண்ணீரை காண்கிற** தேவனிடம் இவர்களின் வேதனைகள் சேர்ந்திருக்காது என்று நினைக்கிறீர்களா?

பழி வாங்கப்பட்ட **ஆபேலின்** இரத்தத்தின் துளிகள் **பரலோகத்துக்கு எட்டியதேயானால்** இந்த திருமண்டலத்தில் மட்டுமல்ல **வேறு எந்த திருமண்டலத்தின் விசுவாசியானாலும்,** ஆயர்களானாலும் எல்லாருடைய விண்ணப்பமும் **கர்த்தரிடம்** சேர்ந்துவிட்டது என்று உறுதியாக கூறுகிறேன்.

**கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் தாமதத்தைக்** குறித்து அன்று பரிகசித்தவர்கள் 2பேதுரு 3:3போல இப்போது ஒவ்வொரு திருமண்டலத்திலும்(சிஎஸ்ஐ,**லூத்தரன்,**TDTA)பாதிக்கப்பட்ட சபை விசுவாசிகள், ஆசிரியர்கள், ஆயர்கள் யாவரும் எனக்கு எழுதும்போது இத்தனை அக்கிரமம்,லஞ்ச லாவனயங்கள், பழிவாங்குதல், நடந்தாலும் அதற்கு காரணமானவர்களான பிஷப்மார், தலைவர்கள்,செயலர்கள் யாரும் கடவுளால் தண்டனை அடையவில்லையே. மேலும் மேலும் அவர்கள் செழிப்போடுதானே வாழ்கிறார்கள் ! கர்த்தர் இவர்கள் கொடுமைகளை கண்டும் காணாதவர்போல இருக்கிறாரா? கர்த்தரிடம் நீதியில்லையா? **நியாயம்** இல்லையா? அவர் **தலையிடமாட்டாரா?** என்று எத்தனை எத்தனை கேள்விகள்! புலம்பல்கள்!. அவர்கள் கடிதத்தின் எழுத்துக்களை வாசிக்கும்போது இப்படியும் சித்திரவதைப் பட்டிருப்பார்களா? இவ்வளவு தூரம் அவமானப்பட்டிருப்பார்களா? என்று எனக்கு அதிர்ச்சியைத்தான் உண்டாக்கியது.

குற்றம் புரிந்தவர்களோடு கர்த்தர் பேசாமலோ, உணர்த்தாமலோ இருந்ததில்லை. **துன்மார்க்கன்** தன் துன்மார்க்கத்தில் சாவாமல் அவன் மனம் திருந்தி பிழைப்பதையே விரும்புகிறார். கர்த்தருக்கும் அவன் **துன்மார்க்கன்** என்று நன்றாக தெரியும். அவன் செய்தது **அக்கிரமம்** என்றும் தெரியும். ஆனால் அந்த துன்மார்க்கனுக்காகவும் **இயேசு தன் இரத்தம்** சிந்தியிருக்கிறாரே!. அவன் மனந்திரும்புதலை கர்த்தர் எதிர்ப்பார்க்கிறார்.

அதனால்தான் இயேசுவின் இரண்டாம் வருகை தாமாதப்படுவதை குறித்து பரிகசித்தவர்களைப்பற்றி ஆவியானவர் பேசும்போது 2 பேது 3:9ல் **தாமதிக்கிறார்** என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குதத்தைக்குறித்து தாமதமாயிராமல் **ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டும் என்று விரும்பி நம் மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறா அதனால்தான் இரண்டாம் வருகை தாமதப்படுகிறது** என்று பேதுரு கூறுகிறார். ஆவியானவர் **மனிதனோடு எப்போதும் போராடுவதில்லை!. ஜாக்கிறதை!.** எந்த திருமண்டலத்திலும் **தவறு** செய்தவர்கள், **காணிக்கை** பணம் திருடியவர்கள், **லஞ்சம்** வாங்கியவர்கள் அதோடு அன்றைய **மிஷனரிகள்** நம் சபை மக்களுக்காக வாங்கிப்போட்ட **நிலத்தை விற்றவர்கள், மதுபான** பிரியர்கள், பெண் பித்தர்கள் **திருமண்டல பணத்தை** கொள்ளையடித்தவர்கள் ஏராளமான நபர்கள்திருமண்டலத்தில் பொறுப்பில் இருக்கிறார்கள். அவர்களில் பலர் சொந்த வாழ்க்கையில் **பரிசுத்த**

**தகுதியில்லாமல்** சபையின் பொருப்பில் இருக்கிறார்கள் அல்லது திருமண்டல பொருப்பில் உள்ளவர்கள் இவர்கள் யாவருக்கும் கர்த்தர் **பல விதத்தில்** எச்சரிப்பை கொடுத்துகொண்டேயிருக்கிறார். அவைகளை அலட்சியப்படுத்துகிறவர்களுக்கு ஆபத்தான ஒரு நாள் வருகிறது !

வாசகர்களாகிய உங்களுக்கு ஒன்று தெரியுமா? நாமெல்லாரும் ஒவ்வொரு **இராத்திரியும்** நிம்மதியுடன் உறங்குகிறோம். ஆனால் மேலே குறிப்பிட்ட இவர்கள் யாருக்கும் இரவு **தூக்கம் வராது.** ஒவ்வொரு நாளும் நாளை **எந்த வக்கீலை** சந்திக்கலாம், எந்த **கோர்ட்டுக்கு** போய் ஆஜராக வேண்டும், என்ற நினைவு அவர்களை துாங்கவிடாது. **தன் பதவி** நிலைக்க **எந்த எல்லைக்கும்** போக துணிந்த இவர்களுக்கு எப்படி துாக்கம் வரும ? எப்படி நிம்மதியுண்டாகும்.

ஒரு குறிப்பிட்ட திருமண்டலத்தில் டையோஸிஸின் வரவு-செலவு கணக்கு பார்க்கும் அலுவலக நபர் இருந்தார். டையோசிஸ் விவகாரங்களை அறிந்தவர், அத்யட்சாதீன பணத்தை பிஷப், செயலரும் இன்னும் சிலரும் சேர்ந்து கொஞ்ச கொஞ்சமாக கொள்ளையடித்த **விவரங்கள்**, அதன் **ஆதாரங்கள்** அனைத்தையும் அந்த நபர் வெளி ஊரில் உள்ள தன் உறவினர் வீட்டில் மறைத்து வைத்து, ஆபத்துக்கு அந்த ஆதாரங்கள் தேவைப்படும் என்று பாதுகாத்து வைத்திருந்தார். இந்த விபரம் எப்படியோ குறிப்பிட்ட டையோசிஸ் நிர்வாகிகள் கள் அறிந்துகொண்டனர். மறுநாள் அந்த நபர் மண்ணெண்னை ஊற்றி தற்கொலை செய்துகொண்டார் என்று பத்திரிகையில் செய்தி வந்தது. பிரச்சனை நீதிமன்றம் செல்லாமல், போலீஸ் விசாரனைக்கும் கொண்டு செல்லாமல் போலீஸ் உயர் அதிகாரிகளுக்கு பல லட்சங்கள் கொடுத்து அந்த வழக்கை ஒன்றுமில்லாமல் செய்துவிட்டனர். கொலை செய்யப்பட்டவரின் மனைக்கு **ஒரு வீடு** குடும்பத்தில் ஒருவருக்கு திருமண்டலத்தில் வேலை ஆக கொலைசெய்யப்பட்ட File குளோஸ். இனி குறிப்பிட்ட நிர்வாகிகளுக்கு எதிராக சாட்சி கூற யாருமே இல்லை.

அந்த குறிப்பிட்ட கொலை நிகழ்ச்சி போலவே ஆந்திராவில் ஒரு பிஷப் டையோசிஸ் நிர்வாகிகளின் ஊழலுக்கு துணை போகாத காரணத்தால் பிஷப் அவர்களின் கார் பயணத்தின்போது பிஷப் காரை (Highway Road) நெடுஞ்சாலையில் நிறுத்தி தீ வைத்து பற்ற வைத்தனர். ஆவிக்குறிய பிஷப்மார்,பாவம் செய்யும் நிர்வாகிகளின் ஊழலுக்கு துணைபோகாததால் **தெய்வ பயம்** உள்ள பிஷப்பின் குடும்பத்தினரின் கதியை கண்டீர்களா? இந்த சம்பவங்கள் எங்கோ ஆப்பிரிக்க ஆதிவாசிகள் நாட்டில் நடக்கவில்லை. நம் CSI தென்னிந்திய திருச்சபைகளின் டையோசிஸில்தான் அரங்கேறியது. என்ன கொடூரம்!. கொலைக்கு அஞ்சாத நபர்கள் பலர் பெரும்பாலான நம் திருமண்டல உயர் பதவிகளில் அமர்ந்துள்ளனர்.

இவர்கள் தமிழ்நாட்டு **அரசியல்வாதிகளைவிட** வட இந்திய **அரசியல்வாதிகளைவிட** மிகப் **பயங்கரமனாவர்கள்.** இவர்கள் **பெரிய வெள்ளிக்கிழமை ஆராதனையில்** 7 வார்த்தைகளில் ஒரு வார்த்தைக்குறித்து **பிரசங்கமும் செய்திருக்கிறார்கள்.** இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கும் **தெய்வம் எங்கே?** இப்படித்தான் மக்கள் கேள்வி கேட்டார்கள்.

இதை செய்தவர்கள் **தண்ணி போடாமல்** எப்படி இரவு நேரத்தில் எப்படி துாங்கமுடியும்? கர்த்தர் இவர்களின் **பிள்ளைகள் மூலமாக** பேசினார். இவர்கள் குடும்பத்தில் திருமணமான **பிள்ளைகள் சமாதானத்துடன் குடும்பம் நடத்தமுடியவில்லை.** இவர்கள் வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் சமாதானம் இழந்து பல வருடங்களாகிறது. சிலருடைய **மனைவிமார்** மட்டும் **முழங்காலில் நின்று** ஜெபித்து கண்ணீர்வடித்துக் கொண்டிருக்கிறார்கள். இத்தனை **பெரிய பதவி இருந்தென்ன** இத்தனை கோடிகள் கொள்ளையடித்து **என்ன பிரயோஜனம்?** சேர்த்த பணம் **வக்கீல்களுக்கும், நீதிபதிகளுக்கும்** கொட்டி கொடுத்து அவர்கள் முன் கைகட்டி நிற்கிறார்கள். **நிம்மதி உண்டா**

இவர்களுக்கு? இல்லை ! இல்லை ! நான் பிரசங்கத்தில் கூறியதுபோல் **சிலரின் பாவத்துக்கான தண்டனையை** (அவர்கள(பிஷப்மாரோ, நிர்வாகிகளோ, யாராயிருந்தாலும்) நியாயதீர்ப்புக்கு **முந்திக்கொள்ளும்** என்று வேத வசனம் தெளிவாக கூறுகிறது. நியாய தீர்ப்புக்குபின் கிடைக்கவேண்டிய தன்டனை இப்போதே சிலர் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

நியாயத்தீர்ப்புக்கு பிறகுதான் அவனவன் கிரியைக்கு தண்டனை உண்டாகும் என்று வேதம் கூறுகிறது. ஆனால் இவர்களுக்கோ இவர்கள் உயிரோடு இருக்கும்போதே **தன் பிள்ளை** விதவையாவதை காண்பார்கள். தன் பிள்ளை விபத்தில் அகப்பட்டு **நடக்கவும் ஓடவும் முடியாமல்** இருப்பதை காண்பார்கள். இவர்களில் சிலருடைய (ஜெபிக்கும் உண்மையான) மனைவிகளை கர்த்தர் எடுத்துக்கொள்வார். **மனைவியை இழப்பது** என்பது மிகப்பெரிய தண்டனை. புருஷனை ஒரு மனைவி இழக்க கொடுத்தால் அவர் எப்படியும் தன்னை தேற்றிக் கொள்வார். ஆனால் ஒரு **மனைவியை இழந்த புருஷன்** எவ்வளவு பெரிய கொடூரனாக இருந்தாலும் எத்தனை வைப்பாட்டிகளை வைத்திருந்தாலும் **தன் மனைவி ஸ்தானத்தை** யாராலும் நிரப்பமுடியாது என்பதை அப்போதுதான் அவர்கள் விளங்கிக்கொள்வார்கள். மேலும் இவர்களில் பலர் தன் சரீரத்திலேயே **பலவித வியாதிகளால்** அவதிப்பட்டு உயிரோடு இருக்கும் போதே **வாதிக்கப்படுவாாகள். கோடிகள்** வங்கியில் உண்டு. ஆனால் இவர்கள் தான் விரும்பியதை அவரால் சாப்பிடமுடியாது. நடக்கமுடியாது. இவர்கள் யாவரும் தங்கள் மரண நாளை எண்ணிக்கொண்டிருப்பாாகள். இதுதான் **நியாயதீர்ப்புக்கு முன் முந்திக்கொள்ளும் தண்டனை** என்பதாகும்.

ஆகவே இதை வாசிக்கும் அன்பரே, சிலர் நினைப்பதுபோல் இத்தனை பாவமும் அக்கிரமும் செய்துவிட்டு அவர்களை யாவருமே நன்றாகத்தானே இருக்கிறாாகள் என்பீர்கள்? நிச்சயமாக இல்லை! உங்கள் பார்வைக்கு அவர்கள் படும் அவதி தெரியாது. ஊழியக்காரரான நான் டாக்டராக பணிசெய்யும்போது இதில் பலர் என்னிடத்தில் வைத்தியம் செய்யாவிட்டாலும் வைத்திய சம்பந்தமான ஆலோசனைகளை என்னிடம் கேட்பார்கள். அப்போதுதான் இவர்கள் என்ன பிரச்சனைகளில் அகப்பட்டு வேதனைப்படுகிறார்கள். வீட்டில் அனுபவிக்கும்- நரகவேதனையும், தன் சரீரத்தில் உள்ள வியாதிகளும் அவர்களை கொஞ்சகொஞ்சமாக அழித்துக்கொண்டிருப்பதை காணமுடிகிறது.

பாதிக்கப்பட்ட ஆசிரியர்,ஆசிரியை,ஆயர்கள் **இவர்களால் பாதிக்கப்பட்டு** கடனில் விழுந்தாலும், வேலையிலிருந்து நீக்கப்பட்டாலும் பாதிக்கப்பட்ட இவர்கள் **இரட்சிக்கப்பட்டிருந்தால்** ஐசுவரியவான் வீட்டு வாசலில் கிடந்த **லாசருப்போல** ஆண்டவருக்கு கீழ்ப்படிந்து உள்ளத்தில் நித்தியத்தைக்குறித்த எதிர்ப்பார்ப்பும், நோக்கமும் லாசருவினிடம் இருந்தபடியால் அவன் சரீரத்தில் உண்டான கட்டிகள் **பருக்கள், புண்கள், வறுமை அவனை வேதனைப்படுத்தவில்லை.** லாசரு ஒரு துண்டு ரொட்டிக்கு நாயுடன் போட்டிபோட்டு எடுத்து சாப்பிட்டு பசியாற்றிக்கொள்ளும் கஷ்ட சூழ்நிலையில் இருந்தாலும் **வாழ்க்கையில் முறுமுறுப்பு** இல்லாமல் இருந்ததால் **பரதேசிக்கு** எடுத்துக்கொள்ளப்பட்டான்.

ஆகவே எந்த திருமண்டலமானாலும் **பழிவாங்கப்பட்டவர்கள்** பதறாமல் பொருமையுடன் இருங்கள். **சோர்ந்து போக** வேண்டாம்!. உங்களுக்கு கிடைத்ததில் **திருப்தியாக** இருக்க உங்களையும், உங்கள் குடும்பத்தையும் பழக்கப்படுத்திவிடுங்கள். பரலோக பாக்கியம் அடைவீாகள். ஆகவே ஜெபிக்கும் விசுவாசிகள் நான் கூறிய தகுதியுடன் ஆங்காங்கே விளம்பரம் இல்லாமல் ஜெபிக்க ஆரம்பித்தால் டையோசிஸ்களில் உயிர்மீட்சி-சமாதானம் நிச்சயம் உண்டாகும். நான் ஜெபிக்க தொடங்கிவிட்டேன். வாசகர்களாகிய நீங்களும் ஜெபிக்க தொடங்குங்கள். எபே 5:7.

**கேள்வி: திருநெல்வேலியில் எந்த ஊழியத்துக்கு எங்கள் காணிக்கைகளை அனுப்பலாம். என் சபைக்குதான் என் தசமபாகம், காணிக்கை, ஸ்தோத்திர காணிக்கை கொடுத்துக்கொண்டிருந்தேன். நானே தனியாக அல்ல. எங்கள் குடும்பத்தில் வேலை செய்து சம்பளம் வாங்கும் ஒவ்வொருவரும் காணிக்கை செலுத்தி கொண்டிருந்தோம். ஆனால் என் சபை பணத்தில்கொழுத்திருக்கிறது 10 மிஷனரிகளை தாங்கியும் சில ஏழைகளுகான உதவிகளை மட்டும் கண்துடைப்புக்காக செய்துவிட்டு மீதியை ஆலய கோபுரங்களை மேலும் மேலும் திருத்தியும்,உயர்த்தியும் கட்டுவதில்,தேவையில்லாமல் சபை பணத்தை லட்சலட்சமாக செலவு செய்துக்கொண்டிருக்கிறனர். மீதி காணிக்கை பணத்தை திருமண்டல நீதிமன்ற வழக்கை நடத்தவும் செலவு செய்கிறார்கள் மேலும் எங்கள் சபை சம்பந்தப்பட்ட சில பிரச்சனைகளுக்காக போலீஸ்சுக்கு கோடி கோடியாக செலவழிப்பதையும் நான் அறிவேன். காரணம் நானே 8 வருடங்கள் சபை பொருளாளராக பணியாற்றினேன். இவர்கள் வீணான செலவுகளை செய்து காணிக்கை பணத்தை விரயம் செய்வதை என்னால் சகிக்கமுடியாமல் பொருளாளர் பதவிலிருந்து விலகிவிட்டேன். இப்போது எங்கள் குடும்பத்தில் நாங்கள் எல்லாரும் வழமையாக ஆலய வரியை மட்டும் ஆலயத்துக்கு கொடுக்கிறோம். ஆராதனையில் ஆலய காணிக்கையை எங்கள் பக்கம் வரும்போது ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய்க்கு மேல் இப்போதெல்லாம் காணிக்கை பையில் போடுவதில்லை. தயவுசெய்து எங்களுக்கு ஆலோசனை கொடுங்கள்.**

***பதில்:*** மிஷனரி பணிக்கு காணிக்கை அனுப்புவது தான் இன்றைய மிக அவசியமான தேவையாகும். அதுமட்டுமல்ல அது அவசர தேவையுமாகும். ஏற்கனவே ஜாமக்காரனில் வாசகர்கள் தாங்க வேண்டிய உண்மையான **6 மிஷனரி ஸ்தாபனங்களின்** விலாசங்களை எழுதி குறிப்பிட்டிருந்தேன். அதே சமயம் நாம் ஆராதிக்கும் சபையில் **நிறைய உண்மையான அத்தியவசிய** தேவைகள் இருக்கும்போது மற்ற இடங்களுக்கு காணிக்கை அனுப்புவது சரியல்ல. முதலாவது நமது சபையின் தேவைகள் பூர்த்தியாகிவிட்டால் உடனே மிஷனரி பணிகளுக்கு காணிக்கை அனுப்ப ஜெபித்து தீர்மானியுங்கள். நீங்கள் அனுப்ப வேண்டிய மிஷனரி ஸ்தாபனத்தின் தகுதிகளையும் ! கவனிக்க வேண்டியது அவசியம். குறிப்பாக **ஜெபகோபுரங்களுக்கோ, திறப்பின் வாசல்களுக்கோ,தோட்டங்களுக்கோ** தவறான உபதேசங்களை கூறும் ஏஞ்சல் TV ஆசீர்வாதம் TV போன்றவைகளுக்கு **பணம் அனுப்பி ஆசீர்வாதத்தை இழந்துவிடாதீர்கள்**. மிக முக்கியமாக **இளம்பங்காளர் திட்டங்களுக்கு** பணம் அனுப்பிவிடவேண்டாம்.

1). நீங்கள் மிஷனரி ஸ்தாபனங்களுக்கு அனுப்பும் பணம் **சுவிசேஷ பணிக்கு** மட்டும் செலவு செய்யப்படுகிறதா என்பதை விசாரித்து உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

2). அந்த மிஷனரி ஸ்தாபனம் தங்களுக்கு வரும் பணத்தை **இந்திய அரசாங்கத்துக்கு** முறைப்படி **கணக்குகளை காட்டுகிறதா**? என்பதை உறுதிப்படுத்துக்கொள்ளுங்கள்.

போலியான மிஷனரி ஸ்தாபனங்களுக்கு பணம் அனுப்பாதீர்கள். **வடஇந்தியாவின் கிராம** புகைப்படங்கள் தங்கள் பத்திரிக்கைகளில் வெளியிட்டு உங்கள் அனுதாபத்தை சம்பாதிக்கும் திருட்டு ஏற்பாடுகளை இப்படிப்பட்டவர்கள் செய்வார்கள். அவர்களை நீங்கள்தான் இனம் கண்டு கொண்டு அவர்களை ஊக்கப்படுத்தாமல் ஜாக்கிறதையாக இருங்கள்.

## டையோசிஸ் நடத்தும் மிஷனரி ஊழியம்

❖ **திருமண்டலம்** (டையோசிஸ்) மூலமாக நடத்தப்படும் மிஷனரி ஊழியங்களை தாங்குவதில் எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. உண்மையில் டையோசிஸ்சில் உள்ள - சபைகள்தான் மிஷனரி பணி செய்ய வேண்டும். ஆரம்ப காலங்களில் **சபைகள் மிஷனரி பாரம் இல்லாமல்** இருந்ததால் கர்த்தர் மற்ற தனிப்பட்ட குழுவினர் நடத்தும் மிஷனரி ஸ்தாபனங்களை எழுப்பி கர்த்தர் அவைகளை ஆசீர்வதிக்கிறார். இப்போது நம் சபைகளும் டையோசிஸ் மூலமாக மிஷனரி பணிகளை நடத்த தொடங்கிவிட்டது. அதிலும் சில உள் நோக்கம் உண்டு.

**சபை மக்கள்** தங்கள் காணிக்கை பணத்தை தனிப்பட்ட குழுவினர் நடத்தும் மிஷனரி ஸ்தாபனங்களுக்கு அள்ளி கொடுப்பதை கண்டவுடன் அதை தடுக்க வேண்டியே டையோசிஸ் **மிஷனரி ஊழியங்களை** தொடங்கினார்கள். மற்றபடி ஆத்மபாரத்தோடு தொடங்கியதாக தெரியவில்லை.

❖ **டையோசிஸ்** மூலமாக நடத்தப்படும் மிஷனரி ஊழியங்களில் **மிஷனரிகளாக** தேர்ந்தெடுக்கப்படும் நபர்கள் பெரும்பாலும் சபையின் பெரும் பணக்காரர்களின் **சிபாரிசுகளின் அடிப்படையிலும்** வெளியில் வேலை கிடைக்காதவர்களையும் **மிஷனரிகளாக** சேர்த்துவிடுகிறார்கள். இப்படிப்பட்டவர்களால்தான் பல மிஷனரி **பணித்தளங்களில்** பண ஊழல், விபச்சாரம் போன்ற பாவங்களில் மிஷனரிகள் விழுந்து விடுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் டையோசிஸ்க்கு உண்மையான ஊழிய விவரங்களை சமர்ப்பதில்லை. **பொய்யான ஊழிய விவரங்களை** சமர்பித்து திருமண்டல தலைவர்கள் பணிதளம் வரும்போது அவர்களிடம் **நல்ல பெயர் வாங்க** காட்டு விசுவாசி மக்களுக்கு பணம் கொடுத்து பணிதள சபைக்கு ஆட்களை சேர்த்து, அவர்களுக்கு **பொய்யான ஞானஸ்நானம்** கொடுத்து **அவர்களை புகைப்படம்** எடுத்து அதை திருமண்டல பத்திரிக்கை மூலம் சபை மக்களுக்கு காண்பித்து, சபை மக்களை மிகவும் ஏமாற்றுகிறார்கள்.

# டையோசிஸ்ஸில் உள்ள மிஷனரிகளுக்கும் - தனிப்பட்ட குழுக்கள் மூலமாக நடத்தப்படும் ஊழியத்தில் உள்ள மிஷனரிகளுக்கும் உள்ள வித்தியாசம்:

உதாரணமாக வெளியில் மற்ற மிஷனிரி ஊழிய ஸ்தாபனங்களில் தெரிந்தெடுக்கப்படும் மிஷனரிகளுக்கும் டையோசிஸ் தெரிந்தெடுத்து அனுப்பும் மிஷனரிகளுக்கும் உள்ள வித்தியாசத்தை பாருங்கள். நிச்சயம் ஆவிக்குறிய தகுதியில் பெரும் வித்தியாசத்தை காண்பீர்கள். அவ்வளவு ஏன்? மற்ற மிஷனரி ஸ்தாபனங்களின் **பொது செயலர்,** தலைவர் இவர்களுக்கும் - திருமண்டலம் தேர்ந்தெடுக்கும் மிஷனரி ஸ்தாபனத்தின் **பொது செயலாளருக்கும்,** தலைவருக்கும் மிகப்பெரிய **அவிக்குறிய வித்தியாசத்தை** நீங்கள் காணலாமே!. பொது செயலர்களின் **ஜெப வாழ்க்கையிலும்,** மிஷரிகளை் நடத்தும் விதங்களிலும் பெருத்த வித்தியாசம் காணப்படும்.

· **பொதுசெயலாராக** பொருப்பெடுத்திருக்கும் டையோசிஸ் மூலம் தெரிந்தெடுக்கப்படும் **ஆயர்கள்** அல்லது தலைவர்களாக இருக்கும் இவர்கள் உபயோகப்படுத்தும் **கார்களை** கவனியுங்கள். **மிக விலை உயர்ந்த பென்ஸ்** போன்ற **கார்களை** வைத்து பவனிவரும் பொது செயலர்களைதான் நாம் காண்கிறோம். தயவுசெய்து இவர்களை சபை மக்கள் நம்ப வேண்டாம். ஜனங்கள் கொடுக்கும் காணிக்கை பணத்தில் **இவர்கள் சொகுசு அனுபவிக்கும்** போலிகளாகத்தான் இருப்பார்கள். அந்த

விலை உயர்ந்த கார் **ஒரு லிட்டர்** பெட்ரோலுக்கு **3 கிலோமீட்டர்** அல்லது 4 கிலோமீட்டர் துாரம்தான் போகும். இந்த காரில் தான் **ராஜஸ்தான்,** குஜராத், **ஆந்திரா** என்று அந்த காரில் சொகுசு பயணம் செய்து ஆங்காங்கே **சொகுசு விடுதிகளில் தங்கி** பணிதளங்களை பார்வையிட செல்கிறார்கள்.

தன் **சொந்த உபயோகத்துக்கு ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு அதிக மைலேஜ்** கொடுக்கும கார்களை இவர்கள் வாங்குவார்களா? ஊழியத்துக்காக கார் வாங்கும்போது அதிக விலை உள்ளதை வாங்காமல் நல்ல காராகவும் செலவு வைக்காத சிக்கனமான காராகவும் பார்த்துதானே வாங்கவேண்டும. அதுதானே நியாயம். ஆனால் மிஷனரி காணிக்கை பணத்தில் விலை உயர்ந்த கார் வாங்குவது என்ன நியாயம். சில பெரிய பணக்கார்கள் ஊழியத்துக்காக பரிசாக வாங்கி கொடுத்தார்கள் என்று சிலர் சமாளிக்கிறார்கள். இவர்கள் உண்மையானவர்களாக இருந்தால் ஐயா விலை உயர்ந்த கார் ஊழியத்துக்கு வேண்டாம்.

பெட்ரோல் செலவு அதிகமாகும் . தயவுசெய்து அதிக மைலேஜ் கொடுக்கும் அதே சமயம் உறுதியான கார் வாங்கிக்கொடுங்கள் என்று கூறி மறுப்பதே ஒரு நல்ல சாட்சியாகும்.

**அதனால்தான் கூறுகிறேன்.** மக்கள் மிஷனரி பணிக்காக போடும் காணிக்கை பணத்தில்ஆடம்பர **சுகம் அனுபவிக்கும்** இவர்களை நம்பவேண்டாம். இவர்கள் கூறும் காரணம் என்ன தெரியுமா? **நீண்டதுாரம் களைப்பில்லாமல்** பயணம் செய்ய **இக்கார்களை** நாங்கள் உபயோகிக்கிறோம் என்பார்கள். அந்த நீண்டதுார பயணத்தை **ரயிலில்** அல்லது **விமானத்தில்** பாதுகாப்பாக செல்லலாமே!. நேரமும் குறையும்! பணமும் மிச்சமாகும். ஒரே ஒரு **பயணத்தில்** நிறைய **மிஷனரி பணிதளங்களை** சந்திக்கலாமே. இரங்கும் இடத்தில் ஒரு **டாக்சி** எடுத்து **பணிதளம் சென்றால் போதுமே.** எவ்வளவு பணம் மீதியாகும். உடல் சோர்வும் உண்டாகாதுஇதில் மிகுதியாகும் பணத்தில் எத்தனையோ **ஆலயம் கட்டலாமே. இவர்களின் எத்தனை பேர் பணிதளங்களை மேற்பார்வையிடும்** முன் ஒருநாள் தனியாக அமர்ந்து உபவாசித்து ஜெபித்து பயணத்தை தொடங்கியிருப்பார்கள். இதற்கான பதிலை அவரவர் மனசாட்சிக்கே விட்டு விடுகிறேன். மிஷனரிகளை மேற்பார்வையிடும் இவர்களுக்கு அங்குள்ள ஆதிவாசிகளைப்பற்றி கரிசனை உண்டா? என்றாவது அவர்களுக்காக அழுததுண்டா? பொது செயலரும்,நிர்வாகிகளும் என்றைக்காவது மிஷனரி ஊழியத்துக்காக கூடி ஜெபித்ததுண்டா?

## அன்றைய காலங்களில் எங்கள் டையோசிஸ் மிஷனரி ஊழிய பயணம்

☐ டையோசிஸ் நடத்தும் மிஷனரி ஊழிய பணிதளத்துக்கு தெற்கு கேரளா டையோசிஸ நடத்தும் ஈட்டுர் நகரம் (ஆந்திரா) மிஷனரி பணித்தளம் **மார்தோமா சபை** மூலம் நடத்தும் மிஷனரி பணிதளம்(போப்பாலின் அருகே உள்ளே கிராமத்தில் உள்ள ஆஸ்ரமம் வடக்கு கேரளா டையோசிஸ் மூலமாக நடைபெறும் **மிஷனரிபணிதளமான மூணாறு** அருகே **இராஜமலை, மறையூர்** அவைகளை கடந்துள்ள கிராமங்கள்,**திருநெல்வேலி**-துாத்துக்குடி திருமண்டலம் மூலம் நடத்தப்படும்(ஆந்திரா) **மல்கனகிரி,குஜராத்** அருகேஉள்ள எனக்கு பெயர் ஞாபகம் இல்லை. அங்குள்ள கிராமங்கள் கோயமுத்துார் CSI திருமண்டலம் நடத்தும் மிஷனரி பணிதளமான கொளத்துார் - ஊட்டி ஆகிய இந்த இடங்களுக்கு நான் சில ஆயர்களுடனும் அன்றைய பொது செயலருடனும் மிஷனரி ஊழியம் செய்ய சென்றிருக்கிறேன்.

அந்த காலத்தில் நானும், **பிஷப்.ஜெயபால்டேவிட்** அவர்களும் ஒரே நாளில் அவரவர்கள் தனித்தனியாக **மல்கனகிரி** பணிதளம் சென்றடைந்தோம். அங்கு மெடிக்கல் கேம்ப் நடத்தி சுவிஷேசம்

அறிவித்தோம். அந்த காட்டு கிராமத்தில் உள்ள ஒரு சாதாரண வீட்டில் **தரையில்** பாய் விரித்து நான் ஒரு பக்கம், **பிஷப். ஜெயபால்டேவிட்** அவர்கள் (அன்று அவர் ஆயராக இருந்தார்). இன்னொரு பக்கமும் **தரையில்தான் படுத்து** உறங்கினோம். பாயும் தலைக்கு பிரயாண பையையும் வைத்து உறங்கினோம்.

**ரயில்வே ஸ்டேஷனிலிருந்து** அதிகாலையில் **ஒரே ஒரு பஸ்** மட்டுமே காட்டுக்குள் உள்ள கிராமமான மல்கனகிரி என்ற இடத்துக்கு போகும். இரவே பஸ்ஸில் உட்கார **இடம் பிடிக்க ஒடுவோம்.** பஸ்ஸில் இடம் பிடிப்பது கடினம். அந்த பஸ்ஸில் எங்கள் பக்கத்திலே **பசுமாட்டையும் ஆடுகளையும்** ஏற்றுவார்கள். பாதி மக்கள் **பஸ்ஸின்மேல் அமர்ந்து** 8 மணி நேர பயணம் செய்து **மல்கனகிரி** கிராமத்துக்கு சென்று அடைவோம். அந்த காலத்தில் நாங்கள் செய்த அந்த ஊழியத்தில் எங்களுக்கு ஒரு **ஆத்தும சுகமும்,** மனதிருப்தியுமிருந்தது. பிஷப்.ஜெயபால் டேவிட் ஐயாவும் நல்ல ஜெபிக்கும் ஆயராகத்தான் காணப்பட்டார். (பிஷப் பதவிக்கு பின் ஜெப வாழ்கையில் அவரிடம் மாற்றங்களை கண்டேன்.)

**மல்கனகிரி** கிராமத்துக்கு இன்று **ரோடு வசதிகள்** நன்றாக செய்துள்ளார்கள். அன்று **மண் ரோடு பயணம்,** இன்று **தார்ரோடு பயணம்.** நான் மேலே குறிப்பிட்ட வேறு பல CSI டையோசிஸ் மிஷனரி ஸ்தாபனங்களிலும் இதே அனுகுமுறைதான். ஆனால் ஆவிக்குரிய அனுபவங்களிள் மிகவும் வித்தியாசமானதாக இருந்தது.

இப்படிப்பட்ட கடின பிரயாண ஊழியத்தை இன்றைய டையோசிஸ் மிஷனரி ஸ்தாபன **தலைவர்களோ, பொது செயலர்களோ** செய்வதில்லை. அதுமட்டுமல்ல. சில மாவட்டங்களில் கொஞ்சம் சம்பளம் வாங்கும் அங்குள்ள ஏழை **மிஷனரிகளிடமிருந்து** பொது செயலர் அவர்கள் **பணிதளம்** வந்ததற்கு அந்த ஏழை மிஷனரி எப்படியோ காணிக்கை சேகரித்து பொது செயலருக்கு கொடுத்துதான் வேதனையான சம்பவத்தையும் நான் கேள்விப்பட்டேன். அது எந்த ஸ்தாபனம் **எந்த திருமண்டலம்** என்று நான் கூறவிரும்பவில்லை. தான் பொதுசெயலராக பதவியில் அமர்ந்து டையோசிஸ் கமிட்டி அனுமதித்த காலத்துக்குள் டையோசிஸ் மிஷனரி ஸ்தாபனம் மூலம் எவ்வளவு பணம் தான் **சேமிக்கமுடியுமோ** அந்த அளவு பணம் சேர்த்து விடுகிறார்கள்.

அடுத்து அந்த பதவிக்கு வருகிறவர்களும் ஆத்மபாரம் இல்லாதவர்களாகவே வருகிறார்கள். இங்குதான் டையோசிஸ் மிஷனரி ஸ்தாபன பொது செயலாருக்கும் மற்ற தனிப்பட்ட குழுவினர் நடத்தும் மிஷனரி ஸ்தாபன பொது செயலாளருக்கு வித்தியாசத்தை காணலாம்.

☐ திருமண்டலத்திலிருந்து **பயண செலவு, விலை உயர்ந்த கார் பவனி** இத்தனையும் போதாதென்று **மிஷனரிகளிடமும் பிச்சை எடுக்கும்** பொது செயலர்கள் மிஷனரி பணியில் இருக்கும் வரை திருமண்டல மிஷனரி பணியில் உண்மையான ஆத்துமாக்கள் பணிதள சபையில் சேருவார்களா? **பணத்துக்காகவும்** சபை மக்களுக்கு பிள்ளைகளின் **படிப்பை ஆசைக்காட்டி** சபையில் ஆள் சேர்க்கும் மிஷனரிகள்தான் டையோசிஸ்க்கு கிடைப்பார்கள்.

☐ உதாரணமாக அன்று 1967ம் ஆண்டு FMPB பணிதளமான பெரியமலையில் முதல் மிஷனரிகளுடன் வந்த அன்றைய FMPB பொது செயலர் சகோ. எமில் ஜெபசிங் நாங்கள் Bro. P. சாமுவேல், Rev. சாம் கமலேசன் யாவரும் பேசிகொண்டிருக்க நீண்ட நேரமாக சகோ. எமில் ஜெபசிங்கை காணவில்லை. தேடிப்பார்த்தபோது எங்கள் மிஷனரி குடிசையின் பின்பக்கம் உள்ள பிரம்மாண்டமான பாறையில் முழங்கால் படியிட்டு அழுது ஜெபித்த காட்சி இன்னும் என் மனதிலிருந்து மறையவில்லை.

மிஷனரி ஊழியம் பொருப்பாளர்களின் கண்ணீருள்ள ஜெபம் உண்மையான மிஷனரிகளை கொண்டுவரும் உண்மையான சபை மக்களும் எழும்புவர்கள். இப்படி அழுதும் பொது செயலாளர்களை டையோசிஸ்ஸில் காண முடியுமா? இங்குதான் வித்தியாசத்தை காணலாம்.

# அரசாங்க மந்திரிகளின் கார்

☐ இந்திய அரசாங்கத்தில் அனைத்து மந்திரிகளும் **விலை உயர்ந்த காரில்** பயனம் செய்யக் கூடாது என்ற விதியே அன்று இருந்தது. அதனால் மத்திய மந்திரிகள், மாநில மந்திரிகள் **அம்பாஸிடர்** என்ற பெயர்கொண்ட **உறுதியான** பெட்ரோலுக்கு **அதிக மைல்** கொடுக்கும் **கார்களை** மட்டுமே **பயன்படுத்தவேண்டும் என்ற சட்டமே இருந்தது.** மக்களின் வரி பணம் விரயம் ஆக்காமல் காக்க அதை சிக்கன நடவடிக்கை என்றார்கள். அப்படியிருக்க டையோசிஸ் நடத்தும் கர்த்தரின் மிஷனரி ஊழியத்துக்கு எத்தனை வீண் செலவுகள் அவைகளை இனியாவது குறைக்க முயற்சி செய்ய வேண்டும். திருமண்டல மிஷனரி தலைவர்கள் ஒரு பணிதளம் செல்ல, பலமுறை முறை உபவாசம் செய்து, **ஜெபித்து,** பாரத்தோடு மிஷனரி ஊழியத்துக்கு சென்ற காலம் உண்டு. அது **பிஷப்.அசரியா** அவர்களோடு போய்விட்டது.

❖ சிஎஸ்ஐ சபையில் ஒரு ஆயர் 3 அல்லது 4 ஆண்டுவரை பணி செய்யலாம். அதன்பிறகு அந்த சபைக்கு வேறு ஆயர் டிரான்ஸ்பரில் வந்து சேருவர். முன்னவர் **வீடு சந்திப்பு** தவறாமல் செய்வார். புதிதாக வந்த ஆயர் வீடுகள் சந்திப்பு நான் செய்யமாட்டேன். வீட்டு விசேஷ நிகழ்ச்சிக்கு மட்டுமே நான் வருவேன் என்று பகிரங்கமாக பிரசங்க பீடத்தில் நின்று கூறுகிறார். இப்படிப்பட்ட ஆயர் அந்த சபையிலிருந்து ஊழிய மாற்றம் வரும் வரை **அந்த சபை மக்களின்** ஆவிக்குரிய ஜீவியம் எப்படியிருக்கும். ஆகவே **மிஷனரி பாரம்** உண்மையாக உள்ள ஒரு ஆயரை கண்டுபிடித்து மற்ற ஆயர்களுக்கு டிரான்ஸ்பர் எதுவும் கொடுப்பது கொடுக்காமல் அதே பொருப்பில் அவரை தொடர்ந்து மிஷனரி ஊழிய பணி செய்ய அனுமதிக்கவேண்டும். இப்படி செய்தால் ஒருவேளை திருமண்டல மிஷனரி ஊழியம் சிறக்க வழி உண்டகலாம். இதில் ககவணிக்கவேண்டியது பொது செயலாளராக தெரிந்தெடுக்கப்படுவார். இரட்சிக்கப்பட்டவராகவும் மிஷனரிபாரம் உள்ளவராகவும் இருப்பது முக்கியம்.

☐ **FMPB,IEM,BYM** இப்படிப்பட்ட உண்மையான மிஷனரி ஸ்தாபனங்களுக்கு செல்லும் காணிக்கைகளை திசை திருப்ப ஆரம்பிக்கப்பட்டதுதான் **திருமண்டல மிஷனரி பணி.** ஆகவே இதில் திருமண்டல **மிஷனரி பொருப்பாளார்களுக்கு** உண்மையான மிஷனரி ஊழிய பாரம் ஏற்படும் வரை திருமண்டல மிஷனரி பணிக்கு காணிக்கை அனுப்பவேண்டாம்.

**நீதிமொழிகள்** கூறியபடி **"செய்யதக்கவர்களுக்கு செய்யுங்கள".** நீங்கள் காணிக்கை அனுப்பும் **மிஷனரி ஸ்தாபனத்தை** குறித்து விசாரிக்காமல் காணிக்கை அனுப்பினால் காணிக்கை அனுப்பும் **உங்களுக்கும்** ஆசீர்வாதம் இல்லை- **பணிதளத்துக்கும்** ஆசீர்வாதம் இல்லை. ஜெபித்து செயல்படுங்கள். நான் மிஷனரி ஸ்தாபனத்தின் பிழையான பொதுச்செயலாளரைப்பற்றி எழுதிய சில விஷயங்கள் **கடிதத ஆதாரம், புகைப்பட** ஆதாரம் பணிதளம் போய் வந்தபின் ஒரு குறிப்பிட்ட **பொது செயலர்** சமர்பித்த பொய்யான **பயணசெலவு விவர பட்டியலின்** அடிப்படையில்தான் நான் இந்த பதிலை பாரத்தோடு எழுதினேன் என்பதை விளங்கிக்கொள்ளுங்கள்.

என் தகப்பனார் 30 வருடம் LMS & CSIயில் செயலாளராக இருந்தார். அவர் அடிக்கடி சொல்வார். **நம் பணம்** ஆலயத்தில் இருக்கலாம். ஆனால் **ஆலயத்தின் ஒரு பைசா** கூட நம் பாக்கெட்டில் இருக்கக்கூடாது என்பார்.

அதையே நான் என் சொந்த ஊழியத்திலும் இன்றுவரை பின்பற்றுகிறேன். எல்லா CSI & TDTA திருமண்டலத்துக்கும் **ஆயர்களுக்கும், பிஷப்மார்களுக்கும், பொது செயலாளர்களுக்கும்** ஆலோசனையாக இதை எழுதுகிறேன்.

திருமண்டலம் நடத்தும் **மிஷனரி ஊழியத்தில்** ஆத்தும பாரம் உள்ள தலைவர்கள் எழும்பட்டும். ஜெபிக்கும் நபர்கள் மனம் திரும்பிய நபர்கள் மிஷனரிகளாக புறப்படட்டும்.

IEM, FMPB, BYM, Tribel Mission போன்ற எந்த மிஷனரி ஸ்தாபனத்தில் மிஷனரிகள் வாங்கும் சம்பளத்தைவிட பண்மடங்கு அதிக சம்பளம் டையோசிஸ் நடத்தும் மிஷனரிகளுக்கு கொடுக்கிறார்கள் என்பது என் மனதை மிகவும் மகிழ்விக்கிறது. அதற்காகவே திருமண்டல மிஷனரி தலைவர்களை நிர்வாகிகளை பாராட்டுகிறேன்.

இந்த சம்பள உயர்வு தமிழ்நாட்டில் திருநெல்வேலி IMST மிஷனரி ஸ்தாபனத்தைத் தவிர, கேரளவிலோ மற்ற எந்த மாநிலத்தில் உள்ள CSI சபைகளும் தங்கள் மிஷனரிகளுக்கு இத்தனை அதிக சம்பளம் கொடுப்பதில்லை என்பது புகழப்படவேண்டிய விஷயமாகும்.

**"உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்தது கட்டாயமாய் அல்ல மனபூர்வமாயும் அவலட்சனமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனத்தோடும் சுதந்திரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல. மந்தைக்கு மாதிரிகளாகவும். கண்கானிப்பு செய்யுங்கள் அப்படி செய்தால்... பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள். 1 பேதுரு. 5:2-4.**

**கேள்வி: "இயேசு அழைக்கிறார்" பால் தினகரன் அவர்கள் இந்திய பிரதமர் திரு. மோடி அவர்களை சந்தித்து பேசிய விவரம் புகைப்படத்தோடு அனுப்பியிருந்தேனே அதைப்பற்றி அபிப்ராயம் என்ன?**

**பதில் :** நீங்கள் அனுப்பிய பத்திரிகை செய்தி **எழுதப்பட்ட நாள்** வேறு நீங்கள் அனுப்பிய **புகைப்பட சந்திப்பு நடந்த கால இடைவெளி வேறு.**

முதலாம் சந்திப்பு **திரு. மோடி** அவர்கள் அடுத்த முறையும் இந்திய நாட்டை ஆள வேண்டும். தேர்தலில் முழு மெஜாரிட்டியுடன் ஜெயிக்க வேண்டும். அதற்காக பால்தினகரனாகிய நான் இயேசு அருள்நாதரிடம் ஜெபிப்பதாக தன் ஆசையை திரு.மோடியிடம் கூறினார்.

நீங்கள் அனுப்பிய இரண்டாவது சந்திப்பும் செய்தியும் தான் **திரு. மோடி** அவர்களை தேர்தலில் ஜெயிக்க வேண்டும் என்று ஜெபிப்பதாக பால்தினகரன் கூறியதற்கு திரு. மோடி அவர்கள் காருண்யா நிகர்நிலை பல்கலைகழகம் தொடர்ந்து 5 ஆண்டுகள் நீடிப்பதற்கு உத்தரவு அளிப்பதாக பால்தினகரனுக்கு அளித்த பெரும் பரிசு ஆகும்.

இவைகள் **யாவும் வியாபார தந்திரமாகும். தகப்பன் எவ்வழியோ - மகனும் அவ்வழி.** சகோ.**DGS தினகரன்** உயிரோடு இருந்த சமயம் **காருண்யா கல்லூரி** நிகர்நிலை பல்கலை கழக அந்தஸ்து பெற அன்றைய மத்திய மந்திரி திரு.**அசோக் சிங்கால்** அவர்கள் அதற்கான (File) கோப்புகளில் கையெழுத்திட வேண்டும். அவர் **கையெழுத்து போடமாட்டார்.**



அவர் கிறிஸ்தவர்களுக்கு எதிரி. அவர் இந்துமத தீவிரவாத அமைப்பான RSS இயக்கத்தை சேர்ந்தவர். ஆகவே அவரை கையெழுத்துபோட வைக்கவேண்டுமானால் இந்துமத மடாதிபதியும் **தமிழ்நாட்டில் மத மாற்று சட்டம்** கொண்டுவர தூண்டுதலுக்கு காரணமாக இருந்தவருமான

தமிழ்நாடு இந்துமத தலைவர் காஞ்ஜி மடாதிபதி திரு.**சங்கராச்சாரியார்** சிபாரிசு செய்தால் திரு.**அசோக் சிங்கா** கையெழுத்து போடுவார் என்ற நம்பிக்கையில் தகப்பனும்,மகனும், நடிகர் S.V.சேகர் மூலமாக **காஞ்ஜி** மடாதிபதி திரு. **சங்கராச்சாரியார்** அவர்களை நேரில் சென்று சந்தித்து தகப்பனும்,மகனும் அவரை தொழுதுகொண்டு அவரின் ஆசீர்வாதத்தை பெற்றுவந்த புகைப்பட செய்திகளை ஜாமக்காரனிலும் தினசரி பத்திரிகைகளிலும் வெளிவந்ததால் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் சகோ. தினகரனை கண்டித்து பேசினார்கள். ஒரே ஒரு பிஷப் மட்டும் சகோ.தினகரனை மிகவும் கண்டித்து எழுதினார்.

அவர் கண்டித்தது சங்கராச்சாரியாரை சகோ.தினகரன் சந்தித்ததற்காக அல்ல. அவரை திருப்திபடுத்த **இந்து விக்கிரக பூஜை பொருட்களை வெள்ளியில் செய்து பரிசாக கொடுத்து வந்தததை ஜாமக்காரனில் வெளியிட்டதை,**அதை அந்த பிஷப் வாசித்து அந்த சம்பவத்துக்காக சகோ.தினகரன் மன்னிப்பு கேட்கவேண்டும் என்றும் பைபிள் பரிசாக கொடுக்க வேண்டிய ஒரு **சுவிசேஷகன் இந்து தேவர்களின் பூஜை பொருளை** கொடுக்கலாமா? என்றும் சாடினார்.

நாலுமாவடி **மோகன் சி. லாசரஸ்** அவர்கள் சகோ. தினகரன் பூஜை பொருள் கொடுக்கவில்லை. ஜாமக்காரன் சகோ.தினகரன் அவர்கள் மீது சேற்றை அள்ளி அவர் மீது வீசினார் என்றெல்லாம் TVயில் பேசினார். உடனே மறுபடியும் வெள்ளி பூஜை பொருள் கொடுப்பதை புகைப்படத்தோடு ஜாமக்காரனில் வெளியிட்டபின் **மோகன் சி.லாசரஸ்** அமைதியானார். கீழே காண்பது மோகன் சி. லாசரஸசை வாய் அடைக்கச் செய்த படம் ஆகும்.



காஞ்சி சங்காராச்சாரியார் அவர்களுக்கு சகோ. D.G.S. தினகரன் அவர்கள் பைபிளையா அன்பளிக்காக கொடுக்கிறார் ? ந்னறாக கவணித்து பாருங்கள் உதவிக்கு வேண்டுமானால் நாலுமாவடி - மோகன் சி. லாசரஸ் அவர்களை அழைத்து பார்க்க சொல்லுங்கள். படத்தில் எந்த வித தந்திரமும்,ஏமாற்றும் செய்யவில்லை. சுற்றிலும் நிற்ப்பவர்களின் கண்கள் எதை க வணிக்கிறது என்பதை பாருங்கள் - அதன்பின் உறுதி செய்துக்கொள்ளுங்கள்.

இத்தனை செய்தும் சகோ.தினகரனால் மந்திரி.அசோக் சிங்காலிடம் கையெழுத்து வாங்க முடியவில்லை. காங்கிரஸ் ஆட்சி வந்தவுடன்தான காருண்யாவை **பல்கலைகழகமாக** மாற்ற அனுமதி பெற்றார்.

இதற்கு பெயர்தான் **இயேசுவை மறுதலிப்பது** என்பதாகும். தன்னை காப்பாற்றிக்கொள்ள பேதுரு அன்று **இயேசுவை எனக்கு யார்என்றே தெரியாது என்றானே**! 30 வெள்ளிக்காசுக்காக ரோம போர்சேவகர்களுக்கு **யூதாஸ்** இயேசுவை முத்தமிட்டு காட்டிக் கொடுத்தானே **இயேசுஅழைக்கிறார்** குடும்பத்தினரின் **காருண்யா கல்லூரி** வியாபாரத்துக்காக காஞ்ஜி சங்கராச்சாரிடம் **விக்கிரகம்தான் தெய்வம்,** பிரயாணத்திலெல்லாம் அந்த விக்கிரகத்துக்கு பூஜை செய்ய வசதி செய்து கொடுத்த **"இயேசு அழைக்கிறார்"** குடும்பம் செய்வதை ஊழியம் என்று ஒரு கூட்ட மக்கள் இன்னும் இருக்கிறார்கள். என்ன வேதனை இது!.

அதையேதான் இப்போது **காருண்யா கல்லூரியை** நிகர்நிலை பல்கலைகழகமாக மாற்றி வெற்றிகரமாக கோடிகளை சம்பாதித்த அந்த வியாபாரத்தை (ரினிவல்) புதுப்பிக்க மகன் **பால் தினகரன் திரு. மோடி** அவர்களின் BJP கட்சி ஜெயிக்க வேண்டும் என்று ஜெபித்து வாழ்த்தி வந்ததால் பால்தினகரனுக்கு பரிசாக (ரினிவல்) **புதுப்பித்தல் ஆர்டர் கிடைத்துவிட்டது.** அடுத்த 5 ஆண்டுகளுக்கு நிகர்நிலை பல்கலை கழக அந்தஸ்து நீடிக்கும். பல கோடிகள் புரளப்போகிறது.

**தங்கள் கல்லூரி வியாபாரத்துக்காக இயேசுவை விற்றுபோட்ட இவர்களை தாங்குகிற பிஷப்மார்கள்,ஆயர்கள்,கிறிஸ்தவர்கள் அனைவரும் இவர்களின் பாவத்தில் பங்காளிகளாகிவிட்டார்கள். தேவ கோபத்திலும் பங்கு இவர்களை தாங்கினவர்களுக்கு நிச்சயம் கிடைக்கும்**

# உபவாச ஜெபம் - முழு இரவு ஜெபம்

ஒரு பக்கம் **நெல்லை,கன்னியாகுமரி** போன்று மற்றும் உள்ள மாவட்டங்களில் பாகங்களில் வாழும் தமிழ் கிறிஸ்தவர்கள் ஒன்றுகூடி இந்தியாவில் பல்வேறு இடங்களில் **கிறிஸ்தவ சபைகளை அழித்தும் கிறிஸ்தவர்களாக மாறின ஆதிவாசி** மக்களை **அழிக்கும் கிறிஸ்தவ ஆஸ்பத்திரிகள்** அடித்து நொருக்கியும் அவர்கள்ஏழைகளுக்கு உதவி செய்வதை தடுக்கும் ஒரு இந்துமத தீவிரவாத கட்சிகள் குறிப்பாக **BJP கட்சி தேர்தலில் ஜெயிக்க கூடாது** என்று அழுது ஜெபித்துக்கொண்டிருகிறார்கள்.

இந்த சூழ்நிலையில் **எரியும் தீயில் எண்ணெய் ஊற்றுவதுபோல்** திரு. **மோடியின்** கட்சியான BJP ஜெயிக்க **பால்தினரனாகிய நான் ஜெபிப்பேன்** என்று பால் தினகரன் கூறியதும் திரு.மோடியை நேரில் சந்தித்து அடுத்த முறையும் நீங்கள்தான் ஜெயிப்பீர்கள் என்று வாழ்த்தியது **முழு கிறிஸ்தவசமூகத்துக்கு இழைத்த பெரும் துரோகம்** ஆகும்.

டெல்லி **கத்தோலிக்க சபை** ஆர்ச் பிஷப் அவர்கள் அனைத்து கத்தோலிக்க சபை பிஷப்மார்களுக்கும் சபை மக்களுக்கும் **திரு. மோடி** அவர்கள் சார்ந்துள்ள BJP கட்சி ஜெயிக்கக்கூடாது என்று கர்த்தரிடம் வேண்டிக்கொள்ளுங்கள் என்று பிரதமர்.மோடி அவர்கள் ஆட்சி செய்யும் (டெல்லி) **தலைநகரிலிருந்தே தைரியமாக அனைத்து சபைகளுக்கும் அறிக்கைகளை அனுப்புகிறார்.**

**பார்லிமெண்டில்** ஆர்ச் பிஷப்பின் இந்த வேண்டுகோள் பெரும் பிரச்சனையாகி எதிர்கட்சி தலைவர்கள் கொதித்தெழும்பினார்கள். எந்த அளவு **கிறிஸ்தவர்களும்** கிறிஸ்தவ சபைகளும் பாதிக்கப்பட்டிருந்தால் இந்த அளவு பகிரங்க அறிக்கையை ஆர்ச் பிஷப் அவர்கள் வெளியிட்டிருப்பார் என்று பேசினார்கள்.

ஒரு பக்கம் கிறிஸ்தவ தலைவர்கள் விசுவாசிகளுடன் வேதனையோடு கிறிஸ்தவ சபைகளை அழிக்கும் BJP ஜெயிக்கக்கூடாது என்று ஜெபிக்க சகோ.பால்தினகரன்மட்டும் திரு. மோடி அவர்களுக்கு கை கொடுத்து அடுத்தமுறை நீங்கள்தான் பிரதமராவீர்கள் என்று கர்த்தர் என்னிடம் கூறினார் என்று தீர்க்க தரிசனம் கூற இவருக்கு எப்படி இந்த துணிகரம் வந்தது.

**ஆடுகளுக்குள்ளே ஓநாய்! கருப்பு ஆடு**? என்றெல்லாம் வர்ணிக்கப்படுவது **இயேசு அழைக்கிறார்** கூட்டத்தைப்பற்றிதானா?. இனி திரு. மோடி BJP,RSS,பஜ்ரங்தள் இவர்களுக்காக ஜெபிப்பதைவிட இப்படிப்பட்ட **ஓநாய்களுக்காக, கருப்பு ஆடுகளுக்காக** ஜெபிப்பது உண்மை கிறிஸ்தவர்களுக்கு முக்கியமல்லவா?.

# இந்தியாவில் உள்ள இஸ்லாமியர்கள் & கிறிஸ்தவர்கள் அழிக்கப்படுவார்கள்

வட இந்தியா **TV** சேனலில் **RSS** பெற்ற பிள்ளைகளாகிய **INDIA TV, NDTV**களில் **DHARMA JAGRAN** அமைப்பின் தலைவர் **RAJESHWAR SINGH** என்பவர் **TV** க்கு கொடுத்த பேட்டி இந்தியாவை அதிர்ச்சியுள்ளாக்கியது.

வருகிற 2021ம் ஆண்டு **டிசம்பர் 31**ம் தேதிக்குள் இந்தியாவில் **கிறிஸ்தவர்களோ, இஸ்லாமியரோ** இருக்கமாட்டார்கள் அவர்கள் யாவரும் முழுவதும் அழிக்கப்படுவார்கள். இது பாரத மாதாவின் கட்டளை. இந்தியாவை முழு இந்துமத நாடாக மாற வேண்டும் என்று பாரத மாதாவின் மனசாட்சி ஏங்கிக்கொண்டிருக்கிறது.

கிறிஸ்துவ மதம்,இஸ்லாமிய மதம் இல்லாத நாடாக இந்தியாவை மாற்றும் திட்டத்தை செயல்படுத்த பல ஆண்டுகளுக்கு, முன்பே திட்டமிட்டுள்ளோம்.

ஆகவே இந்தியாவில் வாழும் **இஸ்லாமியருக்கும்,கிறிஸ்தவர்களுக்கும்** 2021ம் ஆண்டு **டிசம்பர் 31ம்** தேதிதான் இறுதி நாளாக நியமிக்கப்பட்டிருக்கிறது. இது என்னுடைய சொந்த முடிவு மட்டுமல்ல என்னை சார்ந்த அனைத்து இயக்கத்தினரின் முடிவாகும் என்று அறிவித்துள்ளார். இவர் **TV** அறிவிப்பு இந்தியாவை ஆளும் BJP கட்சியின் தலைவர்களுக்கும், பிரதமருக்கும் மற்ற மந்திரிகளுக்கும் பெரும் இக்கட்டான நிலையை உண்டாக்கியுள்ளது. ஆனால் இந்த பகிரங்க TV அறிவிப்பு வெளிவந்து பல மாதங்களாகியும் பிரதமரோ அவர் சார்ந்த கட்சியான B.J.P. தலைவர்களோ, R.S.S. அமைப்போ எந்த மறுப்பும் இதுவரை வெளியிடவில்லை என்பது இந்திய மக்களுக்கு பெரும் சந்தேகத்தை உண்டாக்கியுள்ளது. இவர் எச்சரிப்பை இவர்களும் ஒத்துக்கொள்வதுபோல் இருக்கிறது.

இது பன்முகம் கொண்ட பல பாஷையும் ஆயிரக்கணக்கான **மத நம்பிக்கையும்** கொண்ட இந்திய மக்களின் ஒற்றுமை குலைப்பது மட்டுமல்ல. மத கலவரம் உண்டாக்க கூடியதுமான படுபயங்கரமான அறிவிப்பாகிறது. முழு இந்திய மக்களுக்கும் இந்திய மூத்த குடிமகன் என்று அழைக்கப்படும் இந்திய ஜனாதிபதியும், பிரதமரும் இதை குறித்து மறுப்பு அறிவிக்காமலிருப்பது நாட்டின் அமைதிக்கு கேடுவிளைவிக்கும்.

கிறிஸ்தவர்கள் தங்கள் எதிர்ப்பை போராட்டம் மூலம் தெரிவிக்கமாட்டார்கள் என்று இவர்கள் அறிவார்கள். ஆனால் இஸ்லாமியரை தொட்டால் தேனீக்களை தொட்டதுபோல் தங்களுக்கே ஆபத்தை வருவித்துக்கொள்வார்கள்.

**பாபர் மசூதியை** தொட்டதின் விளைவை இப்போதும் அனுபவித்துக்கொண்டியிருப்பதை இந்த இந்துமத தீவிரவாதிகள் உணரவில்லை என்று தெரிகிறது.

ஆனால் கிறிஸ்தவர்கள் நிலைபாடு **வானத்தையும்,பூமியையும் உண்டாக்கின கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சார்ந்தாகும்.**

கிறிஸ்தவர்களை அழிக்க புறப்பட்ட **சவுலை** நடுவழியில் சந்தித்த தெய்வம் கூறிய வார்த்தையாவது. **சவுலே! நீ துன்படுத்துகிற கிறிஸ்து நானே! முள்ளில் உதைக்கிறது உனக்கு நல்லதல்ல** என்றார்.

கிறிஸ்தவர்களை அழித்த நான் எப்படி **கிறிஸ்துவை** துன்பப்படுத்துகிறவன் ஆவேன்! என்ற கேள்வி சிலரின் உள்ளத்தில் எழுந்தது கிறிஸ்தவர்களை கொலை செய்ய விசேஷ அனுமதி கடிதம் வாங்கி சென்று கிறிஸ்தவர்களை தான் அழித்து கொன்றது. **இயேசு கிறிஸ்துவாகிய** தெய்வ்ததை துன்பப்படுத்துவதற்கு சமம் என்பதை இயேசு சவுலுக்கு விளங்கக் வைத்தார்.

மேலும் கிறிஸ்தவர்களையோ, கிறிஸ்தவ சபைகளையோ தடை செய்வதும், சபைகளை அழிப்பதும் **முள்ளில் உதைப்பதற்க்கு சமம்** என்றும் இயேசு சவுலை எச்சரித்தார். அதன் அர்த்தம் **கிறிஸ்தவர்களை** உதைப்பது அழிக்க நினைப்பது உன் காலுக்குதான் வேதனையை உண்டாக்கும் என்றும் எச்சரிக்கிறார்.

கடந்த பலகாலங்களுக்குமுன் **கர்த்தர் நேசித்த யூத ஜனங்களை துன்பப்படுத்தினவா களுக்கு** நேர்ந்த கதியை **சரித்திர** புள்ளி விவரத்தை எழுதுகிறேன்.

சகரியா 12:2,3 **"பூமியிலுள்ள ஜாதிகளெல்லாம் அதற்கு யூதர்களுக்கு விரோதமாக கூடிக் கொள்வார்கள்.அந்நாளிலே நான் குதிரைகளுக்கெல்லாம் திகைப்பையும் அவைகளின் மேல் ஏறியிருக்கிறவர்களுக்கெல்லாம் புத்திமயக்கத்தையும் வர பண்ணுவேன்".**

செப்பனியா 3:19.... (யூதர்களை) **"உன்னை சிருமைப்படுத்தின யாவரையும் தண்டிப்பேன்".**

கர்த்தர் தான் நேசித்த ஜனங்களுக்கு நன்மை செய்தவர்களுக்கு தெய்வம் நன்மையே அருளி வந்துள்ளார் - கேடு நினைத்தவர்களை தெய்வம் தண்டிக்காமல் விட்டதில்லை.

**உதாரணமாக:**

| | |
|---|---|
| **யூதர்களை கொடுமைப்படுத்திய அசிரியப் பேரரசு** | : (யூதர்களை கொடுமைபடுத்திய பார்வோன்) சிவந்த சமுத்திரத்தில் அந்த பார்வோனும் இராணுவத்தோடு மூழ்கி அழிந்துபோனான். |
| **அசிரியப் பேரரசு** | : மறுப்படியும் எழ முடியாமல் முற்றும் அழிந்துப்போனது. |
| **அப்படியே கல்தேயப் பேரரசு** | : மறுப்படியும் எழ முடியாத வண்ணம் அழிந்துப்போனது. |
| **அப்படியே மேதிய பெர்சியர்** | : முழு அழிவைக் கண்டது. |
| **அப்படியே கிரேக்க பேரரசு** | : இதுவும் முழுவதுமாக அழிக்கப்பட்டது. |
| **யூதர்களை அழிக்க முயன்றே ரோம பேரரசு** | : அதுவும் எழுந்திருக்க முடியாமல் அழிக்கப்பட்டது. |
| **ஒட்டமான் அரசு** | : அதுவும் அழிந்துப் போனது. |

**பல லட்சம் யூதர்களை கொலைசெய்த ஹிட்லர்** : தன்னைதான் தற்கொலை செய்து முடிவை தானே தேடிக்கொண்டான்.

**அப்படியே முசோலினி** : சுட்டுக் கொல்லப்பட்டான்.

1919 வரை யாதர்களை அழிக்க மஜயன்ற **பாலஸ்தீனம் துருக்கி தேசமான ஒட்டமான் தோல்வியுற்றது.**

இப்படியாக கர்த்தர் தன்னை ஆராதித்த யூத மக்களை வேதனைப்படுத்தியவர்களை யெல்லாம் ஒன்றுமில்லாமல் அழித்தார்.

அந்த தெய்வம் மக்கள் பாவம் கழுவப்பட தான் அனுப்பிய மேசியாவான இரட்சகர் இயேசுவை ஆராதிக்கும் கிறிஸ்துவர்களை அழிக்க நினைக்கும் R.S.S. பஜ்ரங்தள்,B.J.P. தர்மா ஜக்ரஸ் போன்றவர்களை சும்மாவிடுவாரா!

**"உன்னை தொடுகிறவன் என் கண் மணியை தொடுகிறான்"** என்று கூறி கிறிஸ்துவ விசுவாசிகளை தம் கண்மணியைப்போல பாதுகாக்கும் ஆண்டவர் தன் மக்களை அழிக்க நினைப்பவர்களை சும்மா விடுவாரா!

நம் தேவன் சகலத்தையும், சகலருடைய நினைவுகளையும் அவர்கள் தோற்றங்களையும் அறிகிற தேவன். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தொடர்ந்து நம் தேசத்துக்காக ஜெபிப்போம்.

## கிறிஸ்தவர்களுக்கு - கிறிஸ்தவர்களே எதிரிகள்:

**விக்கிரகத்தை ஆரததிக்கிறவர்கள் அவர்களைப் போலதான் இருப்பார்கள்** என்று வேதம் கூறிகிறது. ஆனால் **கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களைபோல் வாழவில்லை.**

எல்லா கிறிஸ்துவ சபைகளின் தலைவர்களும் தன் அடையாத்தை இழக்க ஆரம்பித்து விட்டனர். தன் பதவியை தவறாக பயன்படுத்த வேண்டுமென்றே தன் கட்டுப்பாட்டில் இயங்கும் சபைகளில் **ஆயர்களை பழிவாங்குதல், இவர்களுக்கு வரவேண்டிய பதவி உயர்வுகளை நிறுத்தி வைத்தல்,கணவன் ஒரு இடத்திலும் மனைவி வேறொரு ஊருக்கும் மாற்றல் செய்து அவர்கள் தான் பெற்ற பிள்ளைகளை படிக்க வைக்கமுடியாமல் தவிப்பதை கண்டு ரசிக்கும் வக்கிரக புத்தி உள்ள சபை தலைவர்கள்,நிர்வாகிகள்,யாவரும் கிறிஸ்துவுக்கு எதிரானவர்கள், இவர்களை பார்த்தும் இயேசு சொல்கிறார். நீ துன்படுத்துகிற இயேசு நானே! முள்ளில் உதைத்து உன் காலை நீயே காயப்படுத்திக் கொள்ளாதே! என்று எத்தனை பரிவோடு பிஷப்மார்களையும், நிர்வாகிகளையும் எச்சரிக்கிறார்.**

இது தொடர்ந்து R.S.S. போன்ற இந்த தீவிரவாதிகளுக்கும் கிறிஸ்தவ தலைவர்களாகிய இவர்களிக்கும் வித்தியாசம் இல்லையா!. கிறிஸ்தவ சபைகளுக்கு **அவர்களுக்கு எதிராக தெய்வம் யுத்தம் செய்யும் போதுதான் அழிவு நேரிடுகிறது.** அந்தஅழிவு கிறிஸ்துவ சபைகளின் பிஷப்மார்களுக்கும், நிர்வாகிகளுக்கும் உண்டாகும். **மிஷனரி ஸ்தாபனங்களிலும்** தங்களுடைய இனத்தை சார்ந்தவர்களுக்கு ஒரு **நீதி மற்ற இனத்தை** சார்ந்தவர்களுக்கு ஒரு நீதி என்று செயல்படுகிறார்கள். **பிலாத்துவுக்கு தன்** அதிகாரத்தை பயன்படுத்தி கிறிஸ்துவை விடுவிக்க மனதிலலாது போனது. அதுபோல கிறிஸ்தவ ஸ்தாபனங்களின், உயர் அதிகாரத்தில் இருப்பவர்கள் அநியாயம் செய்து ஊழியர்கள் தண்டிக்கப்பட்டால் **கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களையே** அழித்துக் கொள்கிறார்கள் என்பதாகும்.

# இந்தியா அழிவை நோக்கி பயணிக்கிறது:

**திருமணம் செய்யாமல் ஆணும்-பெண்ணும் சேர்ந்து வாழலாம்** அதுவும் இந்திய சட்டப்படி ஒருவன்-அல்லது - ஒருவள் திருமணம் செய்ய குறிக்கப்பட்ட வயதுக்கு முன்பே ஒரு பெண்ணுடன் அல்லது ஒரு ஆணுடன் **ஒரே வீட்டில்** வாழ்ந்து **குடும்பம் நடத்தலாம்** என்று இந்தியாவின் **உச்ச நீதிமன்றமே** ஒரு வழக்கில் தீர்பளித்துள்ளது. உச்சநீதிமன்றம் இப்படி ஒரு தீர்ப்பை அளித்தது அதுவும் **இந்திய கலாச்சாரத்தில்** வாழும் நம் பிள்ளைகளுக்கு இப்படிப்பட்ட அனுமதி அளித்துள்ளதை கேள்விபடும்போது நம்மால் அதை ஜீரணிக்க இயலவில்லை.

**அமெரிக்க,ஐரோப்பிய,ஆஸ்ட்ரேலியா** நாடுகளில்கூட அரசாங்க சட்டம் அனுதித்த வயதுக்கு முன் யாரும் யாரையும் திருமணம் செல்வதில்லை. ஆனால் இந்தியாவில் இப்படிப்பட்ட தீர்ப்பும் சட்டமும் நல்ல நம் இந்திய கலாச்சார நம்பிக்கைகளை எங்கே வழிநடத்துகிறது?

# 2018 கொச்சின் ஜுன் 2 செய்திகள்:

இந்தியாவில் **கேரளா மாநிலத்தில்** ஆலடிஷா என்ற ஊரில் **முகமது ரியாத்** என்பவர் திருமண வயதை அடையாத தன் ஒரே மகள் ஒருஆணை காதலித்து ஓடிவிட்டாள். அவளை **ஆள்கொணர்வு மனுவை** உயர் நீதிமன்றத்தில் (HIGH COURT) தாக்கல் செய்தார். என் மகள் திருமணவயதை அடையவில்லை, ஆனால் ஒருஆணுடன் சேர்ந்து வாழ்கிறாள் என்று குறிப்பிட்டிருந்தார். அதோடு அவர்களை பிரித்து என் மகளை எங்களிடம் ஒப்படைக்கவேண்டும் என்றும் வழக்கில் குறிப்பிட்டிருந்தார்கள்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் **V.சிதம்தரேஷ், K.P.ஜோதிந்திரநாத்** ஆகியவர்கள் அடங்கிய பென்ச் ஏற்கனவே சில ஆண்டுகளுக்கு முன் SUPREME COURT உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பை சுட்டி காட்டி ஒரு **ஆணும் - பெண்ணும் திருமணம்** ஆகாமல் சேர்ந்து வாழ வயது அளவு தேவையில்லை என்று தீர்ப்பு வழங்கியுள்ளது. ஆகவே திருமண வயது அடையாத உங்கள் மகள் குறிப்பிட்ட வயது அடைந்த் பின் அந்த ஆணை திருமணம் செய்து வாழ உங்கள் மகளுக்கு விருப்பம் இருந்தால் அவன் திருமணம் செய்து அதே வீட்டில் குடும்ப வாழ்க்கையை தொடரலாம் என்ன ஆபாசம் இது? இது வக்கிர மோகம் அல்லவா. .கொள்ளலாம் பெற்றோர் அதை தடை செய்யமுடியாது என்று தீர்ப்பளித்தனர்.

High Court, Supreme ourt அனுமதிக்கலாம். ஆனால் **கிறிஸ்தவ வேதம்** இதை அனுமதிக்கவில்லை. **விபச்சாரம்,வேசித்தனம்,அசுத்தம்** என்று குறிப்பிடும் பாவத்தில் இதை **அசுத்தம்** என்று கூறலாம்.

**திருமணம் செய்யாமல்** கிறிஸ்தவ சபை அங்கத்தினர்கள் சிலர் **ஒரே வீட்டில்** குடியிருப்பதும் இப்படிபட்ட பாவ விஷயங்கள் **கனடா,ஜெர்மனி,அமெரிக்கா,இத்தாலி, பிரானஸ்** போன்று இன்றும் மற்ற வெளி **நாடுகளில்மட்டும் தான் நடக்கிறது** என்று நினைத்தோம். ஆனால் **இந்திய கலாச்சாரம்** மிகச் சிறப்பு பெற்ற கலாச்சாரமாகும். ஆனால் அந்த **பாவம்** இப்போது இந்தியாவிலும் பெருகிவிட்டது. **சென்னை,கேரளாவில் கோட்டயம்** பகுதிகளிலும் கிறிஸ்தவர்கள் இப்படி வாழ்கிறார்கள், **அரேபிய நாடுகளிலும்** இப்படி வாழ்கிறார்கள். ஆனால் இப்படிபட்டவர்களுக்கு **ஆயர் அவர்கள் திருவிருந்து** கொடுத்தும்,நிர்வாக பொருப்பிலும் இப்படிப்பட்டவர்களை அமர வைத்தது மிகவும் வேதனையளிக்கிறது.

இந்த அசுத்தம் நாளாக நாளாக **விபச்சார பாவமாக மாறும்.** நாங்கள் ஒரே அறையில் அல்லது ஒரே வீட்டில் குடியிருந்தாலும் ஒருவர்கொருவர் நெருங்கி பழகுவதில்லை விட்டுவாடகை சுமை குறைக்க இப்படி ஒரே வீட்டில் வாழ்கிறோம் என்று இதை நியாயப்படுத்துகிறார்கள். ஆனால் **நெருப்பும்-பஞ்சும் அருகே அருகே இருப்பது ஆபத்தல்லவா! பழகுவதில்லை,** தொடுவதில்லை என்றெல்லாம் கூறினாலும் கிறிஸ்தவ சாட்சியில்லாமல் போகுமே. மற்றவர்கள் பார்வையில் இவர்களின் சாட்சி நீங்கிவிடுமே!

**தன்வஸ்திரம் வேகாமல் மடியிலே எவனாவது நெருப்பை வைத்துக்கொள்ள கூடுமோ? நீதி 6:27.**

**அசுத்தம் - விபச்சாரமாகும், விபச்சாரம் - வேசிதனமாகும்** தீமையாக தோன்றுகிறதை **விட்டு விலகு** என்று வேதம் நம்மை எச்சரிக்கிறது. ஆயர்கள், பாஸ்டர்கள் தங்கள் பிரசங்கத்தில் இவைகளை கூறி எச்சரிக்காதது வெட்ககேடானதாகும்.

# இந்தியா எங்கே போகிறது?

மேலை நாடுகளின் நாகரித்தை இந்தியாவிலும் சட்டமாக்குவது நம் பிள்ளைகளை நாமே பாவம் செய்ய அனுமதிக்கிறோம்! என்று அர்த்தமாகும்.

## ஜாக்கிரதை தேவன் தம்மை பரியாசம் பண்ணவொட்டார்:

**தேசத்துக்காக ஜெபிப்பவர்கள் இதை விஷயத்தையும் ஜெபக் குறிப்பாக வைத்து ஜெபியுங்கள். அல்லவென்றால் இப்பாவம் நீங்கள் பெற்ற பிள்ளைகளையும் பேர பிள்ளைகளின் வாழ்க்கையையும் கெடுக்கும். ஜாக்கிறதை!**

**மற்றவர்களுக்கு பயமுண்டாகும்படி, பாவம் செய்தவர்களை எல்லாருக்கும் முன்பாக கடிந்துக் கொள். 1தீமோ 5:20.**

## ஆலோசனை- ஜெபத்துக்கு தொடர்புக்கொள்பவர்கள் கவனிக்கவும்:

**ஒவ்வொரு மாதத்திலும்** வாரத்தில் **செவ்வாய்கிழமை** முதல் **புதன் மதியம் வரை** மட்டுமே நான் வீட்டில் **சேலத்தில் இருப்பேன்.** ஆலோசனைக்கும்-ஜெபத்துக்கும் நேரில் **சேலம்** (தமிழ்நாட்டுக்கு) வர விரும்புகிறவர்கள், முன்பதாகவே நீங்கள் என்னை சந்திக்க விரும்பும் தேதிகளை கடிதத்தில் குறிப்பிட்டு எழுதி கேட்டு எங்களிடமிருந்து பதில் பெற்றப்பின் அல்லது போனில் தொடர்புகொண்டு சந்திக்கும் நாளை உறுதிப்படுத்திக்கொண்டு வரவும். தொலைப்பேசியில் ஆலோசனை பெறுகிறவர்கள் வேதவசன சந்தேகம் கேட்கிறவர்கள், ஜெப குறிப்புகளை பகிர்ந்துக்கொள்கிறவர்கள் காலை 8மணியிலிருந்து இரவு 11மணிவரை தொடர்புக் கொள்ளலாம். **(தினசரி** மதியம் 2 மணியிலிருந்து மாலை 5மணிவரை போனில் தொடர்புக்கொள்ள முயலவேண்டாம்.) குறிப்பிட்ட அந்த நேரம் நேரில் வருபவர்களுக்காக ஜெபிக்கும்நேரமாகும். மேலும் அது **நாங்கள் ஓய்வு** எடுக்கும் நேரமுமாகும்.

அந்த **3மணி நேரம் எங்கள் தொலைபேசியை ஆப் செய்து வைத்து விடுவோம்** என்பதை நீங்கள் அறிய விரும்புகிறேன்.

‘ வடஇந்திய ஊழியங்களுக்கு நான் சென்றால் **செவ்வாய்கிழமையிலும் நான்** வீட்டில் இருக்கமாட்டேன் என்பதையும் அறியவும்.

# ஆன்-லைன் பேங்கிங் (ONLINE BANKING)

காணிக்கையை மணிடிரான்ஸ்பர்(NET Transfer) வழியாக அனுப்ப விரும்புகிறவர்களுக்கு என்னுடைய வங்கி தகவல்கள்:

**A/c Name : Dr. M.G.E.PUSHPARAJ :**

வெளிநாட்டில் உள்ளவர்கள் காணிக்கை அனுப்ப (**Overseas Doners):**

**1). Bank Name : State Bank of India - Srirangapalayam Branch - SALEM -1970**

**A/c No. 10764116842, Swift code: SBININBB637**

இந்தியாவில் உள்ளவர்கள் காணிக்கையை அனுப்ப **(India Doners):**

**IFSC CODE : SBIN0001970- A/c No.10764116842**

2) **Bank Name: CANARA BANK, (Suramangalam Branch) - 1219**

வெளிநாட்டில் உள்ளவர்கள் காணிக்கை அனுப்ப(**Overseas Doners):**

**SWIFT CODE: CNRBINBBSLM - A/c No. 1219101013622**

இந்தியாவில் உள்ளவர்கள் காணிக்கையை அனுப்ப**India Doners:**

**IFSC CODE : CNRB0001219 - A/c No. 1219101013622,**

**MICR CODE: 636015005.**

# என் தொலைபேசி:

கூடியவரை என்னோடு கடித தொடர்பு அல்லது இ-மெயில் மூலம் தொடர்பு கொள்ள முயலுங்கள். என் தொலைபேசி தொடர்பு செவ்வாய்,புதன் ஆகிய நாட்களில் லைன் கிடைப்பது கடினம். அதனால் **நான் தொலைபேசியை உபயோகிப்பதேயில்லை** என்று நினைத்து சலித்துக்கொள்கிறார்கள். பலருக்கு கோபமும் உண்டாகிறது. பகலில் மற்றவர்களுக்கு ஆலோசனை கொடுக்கும்போதும் மற்றவர்களுடன் இணைந்து ஜெபிக்கும்போதும் போனை எடுத்து கீழே வைத்து விடுகிறேன். இதுதான் உண்மையான பிரச்சனை வேண்டுமென்றே நான் போனை துண்டிப்பதில்லை.



# மரண அறிவிப்பு:

ஜாமக்காரன் பத்திரிக்கையின் நீண்ட கால வாசகரும், என் ஊழியத்தை நீண்ட காலம் தாங்குகிறவரும், சென்னை State Bank மேலாளராக பணியாற்றி ஓய்வுபெற்றவருமான **சகோ.மைசன் சுகுமார்** அவர்கள் தனது 65வயதில் 2018 ஜூன் மாதம் 20தேதி அன்று கர்த்தருக்குள் நித்தியடைந்தார்.

சகோதரனை இழந்த மனைவி,மகன், பெண் பிள்ளைகள் யாவருக்கும் கர்த்தர்தாமே ஆறுதலையும், சமாதானத்தையும் அருளுவாராக.

**வாழ்த்துகிறோம்!** **வரவேற்கிறோம்!!**

## திருச்சி & தஞ்சை CSI திருமண்டலத்திற்கு புதிய பிஷப்



திருச்சி CSI திருமண்டலத்தின் 6வது பிஷப்பாக தெரிந்தெடுக்கப்பட்ட **Rt.Rev.Dr.D.CHANDRASEKARAN** அவர்களை ஜாமக்காரன் வாசகர் சார்பிலும், என் தனிப்பட்ட சார்பிலும் வாழ்த்துகிறோம்.

CSI பிஷப் தேர்தலில் கடந்த காலங்கள் அதிக ஓட்டுபெற்று ஜெயித்து முதலாவதாக வந்த ஆயரை ஒதுக்கிவிட்டு தேர்தலில் மூன்றாவது இடத்தை பெற்று தோற்றவரை **பிஷப்பாக** மாடரேட்டர் அவர்கள் அறிவிப்பது கடந்த காலத்தில் சிஎஸ்ஐயில் நடந்த பண விளையாட்டாக இருந்தது. ஆனால் இம்முறை முதல் சுற்றிலேயே அதிக வாக்குகள் பெற்றவரை பிஷப் ஆக்கியது CSIயில் ஏற்பட்ட மாற்றமாக கருதி தேவனை துதிக்கிறேன்.

இவர் பச்சமலையில் ஆதிவாசிகளிடையே மிஷனரி பணியாற்றியவராகும். மிஷனரி ஸ்தாபனங்களை ஆதரிப்பவர். இப்படிப்பட்டவர் பிஷப்பாக வந்தது மிகவும் பாராட்டதக்கது. பிஷப் அவர்களை தெரிந்தெடுத்த திருச்சி-தஞ்சை திருமண்டல மக்களை குறிப்பாக ஆயர்களை வாழ்த்துகிறேன். திருமண்டலம் வசனத்தில் வளர வாசகர்கள் ஜெபிப்போம். குறிப்பாக பிஷப் அவர்களுக்காக ஜெபிப்போம்.

---

JULY 2018

# Printed Book (Periodical)

**RNI Reg. No. TNBIL/2016/70171**

**Annual Subscription:**
**India - Rs.60/**
**Foreign - Rs.600/**

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.